# அநுபவமுறை இலக்கணம்

845

845
4-54

மூன்றாம் படிவம்

OFFICE OF T[illegible]STRAR OF BOOKS
24 DEC 1954
MA[illegible]

ரா[illegible]ர் & கம்பெனி., சென்னை-5.

TB
P31 (8)
M54
136341

# அநுபவமுறை இலக்கணம்

## மூன்றாம் படிவம்

[அரசினரால் அண்மையில் வெளியிட்டுள்ள
பாடதிட்டப்படி எழுதப்பெற்றது.]

ஆசிரியர் :
**வித்துவான் - R. கன்னியப்ப நாய்க்கர்,**
தமிழாசிரியர், கெலட் உயர்நிலைப்பள்ளி,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

பிரசுரகர்த்தர் :
ராஜா ராம்சந்தர் & கம்பெனி,
**520,** திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-**5.**

காபிரைட்] 1954 விலை அணா 10

முதற்பதிப்பு : 1954.

# முகவுரை

அண்மையில் அரசியலார் வெளியிட்டுள்ள பாட திட்டப்படிக்கு இவ்விலக்கண நூல் எழுதப்பெற்றுள்ளது; மாணவர்களுக்கு எளிதில் புரியும் செந்தமிழால் இயற்றப் பெற்றுள்ளது; ஒவ்வோர் இலக்கணமும் விதிவரு முறைப் படி (Inductive method) விளக்கப்பட்டுள்ளது. ஆகை-யால், இந்நூல் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும் என்று எண்ணுகிறேன். இதனைக் கண்ணுறும் தலைமை யாசிரியர்களும், தமிழாசிரியர்களும் இந்நூலைப் பள்ளி களில் மாணவர்களுக்குப் பாடமாகவைத்து, என்னை இப்பணியில் மென்மேலும் ஊக்குவார்கள் என்று நம்பு-கிறேன்.

இங்ஙனம்,

R. கன்னியப்ப நாய்க்கர்

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை – 14.

# பொருளடக்கம்


I. எழுத்துக்கள் ... 1

1. உயிர்ப்பு எழுத்துக்கள் ... 2
2. ஒலிப்பு எழுத்துக்கள் ... ,,
3. வாய்வழி ஒலியும் மூக்குவழி ஒலியும் ... 3
4. அலகெழுத்துக்களாக எழுதுதல் ... ,,
5. சொல்லின் முதல், இடை, கடைகளில் வருவதற்கேற்ப எழுத்துக்களின் ஒலி மாறுதல் ... 5
6. குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும் ... 6

II. சொல் .... 10

1. சுட்டு, வினு சொற்கொத்துக்கள் ... ,,
2. இடுகுறிப் பெயரும் காரணப் பெயரும் ... 11
3. சொற்கள் பெரும்பாலும் காரணப் பெயர் களே என்பது ... 13
4. வழூஉச் சொல்லும் வழக்கும் அவற்றைத் திருத்துதலும் ... 14
5. ஒருபொருள் பலசொற்கள் பொருளில் நுட்பமாக வேறுபடுதல் ... 16
6. கால இடைநிலை ... 19
7. உரிச்சொல் ... 20
8. இடைச்சொல் ... 22
9. சாரியை ... 23
10. ஆகுபெயர் ... 26
11. வெளிப்படையும் குறிப்பும் ... 28
12. இயல்பு வழக்கும் தகுதி வழக்கும் ... 32

III. தொடராக்கம் ... 37

1. தொகை நிலைத்தொடர் ... ,,

2. தொகா நிலைத்தொடர் ... 39

IV புணர்ச்சி .... 43

1. உயிர்முன் உயிர் ... ,,

2. உயிர்முன் மெய் ... 44

3. மெய்ம்முன் மெய் ... 45

4. மெய்ம்முன் உயிர் ... 46

5. மகர மெய்யீற்றுப் புணர்ச்சி ... ,,

6. எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி ... 47

V. அணிகள் .... 50

1. தற்குறிப் பேற்ற வணி ... ,,

2. உயர்வு நவிற்சி யணி ... 51

3. முரண் அணி ... 52

VI. நிறுத்தற்குறிகள் .... 53

1. ஒற்றை மேற்கோள் குறி ... ,,

2. இரட்டை மேற்கோள் குறி ... ,,

3. சிறுகோடு இடல் ... 54

4. அடைப்புக் குறி ... ,,

VII. கட்டுரை எழுதுதல் ... 56

1. வருணனைக் கட்டுரை ... 57

2. விளக்கக் கட்டுரை ... 60

3. வரலாற்றுக் கட்டுரை ... 63

VIII. கடிதம் எழுதுதல் ... 66

1. விண்ணப்பம் ... ,,

2. வாணிகக் கடிதம் ... 67

3. அழைப்பிதழ் எழுதுதல் ... 68

4. பொதுக்கூட்ட அழைப்பிதழ் எழுதுதல் ... 69

# அநுபவமுறை இலக்கணம்

## மூன்ரும் படிவம்

## I. எழுத்துக்கள்

மாணவர்களே! தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்களை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்; அவைகளைப் பற்றிய விவரங்களையும் அறிந்திருக்கிறீர்கள். ஆயினும், சில உங்களுக்கு மறதியாக இருக்கலாம். அவற்றை நினைவுகொள்ள சில விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவை எவை என்று அறிந்துகொள்ளுங்கள்.

எழுத்துக்கள் ஒலி வடிவம் என்றும், வரிவடிவம் என்றும் இரண்டு வகைப்படும். ஒன்றை ஒலியால் அறியப்படுத்துவது ஒலிவடிவம் எனப்படும். அவ்வொலியைக் கோட்டுருவத்தால் வெளிப்படுத்துவது வரிவடிவம் எனப்படும்.

குறிப்பு:—சொல்லுக்குக் காரணமாய் இருக்கும் கோட்டுருவத்தை ஒலியால் அறிவித்தலே, ஒலிவடிவம் எனப்படும். தும்மல், கனைத்தல், இருமல் முதலியவற்றின் ஒலிகள், ஒலிவடிவங்கள் எனப்படா.

எழுத்துக்கள் உயிரினம் வல்லினம், மெல்லினம் இடையினம், ஆய்தம் என்று ஐந்து வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் உயிரெழுத்துக்களும், இடையின எழுத்துக்களும் கழுத்திலிருந்து பிறக்கின்றன. வல்லெழுத்துக்கள் மார்பிலிருந்து பிறக்கின்றன. மெல்லெழுத்துக்கள் மூக்கிலிருந்து பிறக்கின்றன. ஆய்த எழுத்து, தலையினின்று பிறக்கின்றது. இவற்றை ஒலித்து, இவை பிறக்கு மிடங்களைக் கவனித்து அறிந்துகொள்ளுங்கள்.

## (1) உயிர்ப்பு எழுத்துக்கள்

க், ச், ட், த், ப், ற் - இவ்வெழுத்துக்களை ஒலித்துப் பாருங்கள். உயிர்ப்பு (மூச்சு விடுதல்) அளவில் இவை ஒலிக்கப்படுகின்றன. இவற்றை ஒலித்து இதன் உண்மையை அறிந்துகொள்ளுங்கள். உயிர்த்தல் அளவில் இவ்வெழுத்துக்கள் ஒலிக்கப்படுதலால், இவை, உயிர்ப்பு எழுத்துக்கள் எனப்படும். மீதியுள்ள எழுத்துக்களில் இவை போன்றவை பலவுள்ளன. அவ்வெழுத்துக்களையும் ஒலித்து, அவ்வுயிர்ப்பு எழுத்துக்களையும் அறிந்துகொள்ளுங்கள்.

## (2) ஒலிப்பு எழுத்துக்கள்

க, ச, ட, த, ப, ற - இவ்வுயிர்மெய் வல்லெழுத்துக்களை ஒலித்துப் பாருங்கள். இவை, சற்று மிக்க ஒலியைப் பெற்றிருக்கின்றன. இவை சற்று மிக்க ஒலியைப் பெற்றிருப்பதால், இவற்றை ஒலிப்பு எழுத்துக்கள் என்பார்கள். (ஒலிப்புமிக்க ஒலி) உயிர் எழுத்துக்களுள் பல ஒலிப்பு எழுத்துக்கள் இருக்கின்றன. மெல்லின, இடையின எழுத்துக்களுள்ளும் சில ஒலிப்பு எழுத்துக்கள்

இருக்கின்றன. அவ்வெழுத்துக்களை ஒலித்து, அவற்றின் ஒலி வேறுபாடுகளின் மூலம் ஒலிப்பு வகைபைச் சார்ந்த எழுத்துக்களை யறிந்துகொள்ளுங்கள்.

### (3) வாய்வழி ஒலியும் மூக்குவழி ஒலியும்

உயிர் எழுத்துக்களையும், வல்லின எழுத்துக்களை-யும், இடையின எழுத்துக்களையும் ஒலித்துப் பாருங்கள். அவை, பெரும்பாலும் வாயைத் திறந்து ஒலிப்பதாலேயே பிறக்கும். ஆகவே, இவ்வெழுத்துக்கள், வாய்வழி பிறக்கும் ஒலி வடிவங்களாகும்.

மெல்லெழுத்துக்களை ஒலித்துப் பாருங்கள். இவ்-வெழுத்துக்கள் மூக்கை யிடமாகக்கொண்டு பிறக்-கின்றன. ஆகவே, இவ்வெழுத்துக்கள், மூக்கு வழி பிறக்-கும் ஒலிவடிவங்க ளாகும்.

### (4) அலகெழுத்துக்களாக எழுதுதல்

செய்தான் செய் தான்

மேற்கண்டவாறு சொற்களை அசைகளாகப் பிரிக்க-லாம். அசை என்பது அசைந்து நிற்றலாகும். அதாவது கூறுபடுத்தலாகும். ஓர் எழுத்து தனித்தோ, இரண்டு எழுத்துக்கள் இணைந்தோ ஓர் அசையாக வரும். ஓர் எழுத்து அசையாக வருவதை நேர் அசை என்றும், இரண்டு எழுத்துக்கள் இணைந்து அசையாக வருவதை நிரையசை என்றும் கூறுவர். இவற்றிலுள்ள எழுத்துக்-களை எண்ணும்போது மெய்யெழுத்துக்களைச் சேர்ப்பதில்லை. இவ்வாறு பிரிப்பதற்கு அலகிடுதல் என்பது பெயர்.

(அ) ஒரு சொல்லின் முதலில் நெட்டெழுத்தும், அதனை அடுத்துக் குற்றெழுத்தும் இருந்தால், அவ்-வெழுத்துக்கள் ஒவ்வொன்றும் நேரசையாகும்.

உ-ம்: நாடு — நா டு

(ஆ) தனித்த குற்றெழுத்துக்குப்பின் ஒற்றெழுத்து வந்தால் நேரசையாகும்.

உ-ம்: கல்

(இ) தனித்த நெட்டெழுத்துக்குப்பின் ஒற்றெழுத்து வந்தால் நேரசையாகும்.

உ-ம்: வால்

(ஈ) குறில் எழுத்துக்கள் இணைந்து வந்தால் நிரையசை யாகும்.

உ-ம்: பல

(உ) இரு குற்றெழுத்துக்களுக்குப்பின் ஒற்றெழுத்து வந்தாலும் நிரையசையாகும்.

உ-ம்: பலர்

(ஊ) குறிலும் நெடிலும் இணைந்து வந்தாலும் நிரையசையாகும்.

உ-ம்: அணு

(எ) குறில் நெடில்களுக்குப்பின் ஒற்றெழுத்து வந்தாலும் நிரையசையாகும்.

உ-ம்: வரால்

இவை ஒவ்வொன்றும் ஓர் அசை எனப்படும். ஆகவே, நேரசை நான்கும் நிரையசை நான்குமாக ஓரசைகள் எட்டாகும்.

கீழே சில சொற்கள் அசைபிரித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. அவற்றைப் படித்து விளக்கமாக அறிந்து கொள்ளுங்கள்.

| சொல் | அசைபிரித்தல் |
| --- | --- |
| கண்டான் | கண் டான் |
| மருண்டான் | மருண் டான் |
| பலாப்பழம் | பலாப் பழம் |
| காட்டுக | காட் டுக |
| விடாப்பிடி | விடாப் பிடி |
| கணிகண்ணன் | கணி கண் ணன் |
| வேதியர்கள் | வே தியர் கள் |
| பராசக்தி | பரா சக் தி |

**(5) சொல்லின் முதல், இடை, கடைகளில் வருவதற்கேற்ப எழுத்துக்களின் ஒலி மாறுதல்**

கைலை நடக்கையர் காக்கை

கை என்னும் வல்லெழுத்து, சொல்லின் முதல், இடை, கடைகளில் வந்திருக்கின்றது. முதற் சொல்லில் உள்ள கை என்னும் எழுத்திற்கு உள்ள ஓசையே, இரண்டாவது மூன்ருவது சொற்களில் உள்ள கை என்ற எழுத்துக்களுக்கும் உண்டா என்று கவனியுங்கள். முதலில் உள்ளதின் ஒலியைக் காட்டிலும் இடையில் வந்துள்ளதின் ஒலி, சற்று குறைவான இடையோசை உள்ளதாக இருக்கிறது; கடைசியில் உள்ளது, சிறிது ஓசை குறைந்துள்ளது. மேற்கண்ட சொற்களை ஒழுங்காகச் சொல்லி மேற்கூறிய ஓசை வேறுபாடுகளை அறிந்து கொள்ளுங்கள்.

நடத்துக, நடந்து வா.

மேற்கண்ட சொற்களுள் முதற்சொல்லில் உள்ள **து** என்ற எழுத்து, வல்லொற்ருேடு சேர்ந்து வந்திருக்கிறது. அதனுல் அது மிகுதியான வல்லோசை பெறுகிறது.

இரண்டாவதாக உள்ள சொல்லில் **து** என்ற எழுத்து, மெல்லொற்ருேடு சேர்ந்து வந்திருக்கிறது. அதனுல் வல்லெழுத்து சிறிது மெல்லோசையும்பெறுகிறது. ஒலித்துப் பார்த்து இவ்வேறுபாட்டை அறிந்து கொள்ளுங்கள்.

ங், க — இவ்வெழுத்துக்களைத் தனித்தனியாக ஒலித்தால், அவை, தமக்குரிய ஒலியினின்று குறைவதில்லை. ஆனல், வேறு எழுத்தோடு சேர்த்து ஒலிப்பதால் கால அளவு குறைகின்றது; ஒலி மாறுபாடு அடைகிறது. கீழ்க்காண்பவற்றைப் படித்து இவற்றை அறிந்துகொள்ளுங்கள்.

| | |
|---|---|
| **பங்கம்** | **துன்பம்** |
| **சஞ்சலம்** | **கண்டம்** |
| **கம்பம்** | **பந்தம்** |
| **கந்தன்** | **கொஞ்சம்** |

## (6) குற்றியலுகரமும், முற்றியலுகரமும்

(1) பசு, படு, அது, சிறு.

(2) காசு, திருடு, பந்து, சுற்று.

முதல் வரிசையில் உள்ள சொற்களைத் திருத்தமாகப் படியுங்கள். பிறகு, இரண்டாவது வரிசையில் உள்ள சொற்களையும் திருத்தமாகப் படியுங்கள். அவற்றின் கடைசியில் உள்ள எழுத்துக்களின் ஒலியில் என்ன மாறுபாடு உண்டாகிற தென்பதைக் கவனியுங்கள். முதல் வரிசையில் உள்ள சொற்களின் ஈற்றில் உள்ள எழுத்துக்களின் ஒலியைக் காட்டிலும், இரண்டாவது வரிசையில் உள்ள சொற்களின் ஈற்றெழுத்தொலி குறைந்திருப்பதைக் கவனிக்கவும். இவ்வாறு குறைந்த ஒலி பெற்று வரும் உகரத்தைக் குற்றியலுகரம் என்-

பார்கள்; குறையாத ஒலி (ஒரு மாத்திரை நேரம்) பெற்றுவரும் உகரத்தை முற்றியலுகரம் என்பார்கள்.

கு, சு, டு, து, பு, று என்ற எழுத்துக்கள் மேலே முதல் வரிசையில் வந்துள்ளபடி தனிக்குறிலை அடுத்து வந்தால் முற்றியலுகரமாகும். அவ் வெழுத்துக்கள் மேலே இரண்டாவது வரிசையில் கண்டுள்ளபடி நெடிலை அடுத்தும் இரண்டு முதலிய எழுத்துக்களை அடுத்தும் வந்தால் குற்றியலுகரமாகும்.

குற்றியலுகரம் ஆறு வகைப்படும். ஈற்றெழுத்துக்குப் பக்கத்தில் உள்ள எழுத்தைக் கொண்டு இன்ன வகையான குற்றியலுகரமென்று அறியவேண்டும்.

உ-ம்: (1) உயிர்த்தொடர் குற்றியலுகரம்;— வரகு. (இதில் ஈற்றுக்கு அயல் எழுத்து உயிர் எழுத்தாக வந்துள்ளதை அறிக. மற்றவற்றிற்கும் இவ்வாறே அறிந்துகொள்க.)

(2) நெடில் தொடர் குற்றியலுகரம் — காடு. (இதில் ஈற்றுக்கு அயல் எழுத்து உயிராக இருந்தாலும், நெடிலாக இருப்பதால் நெடில் தொடர் எனப்பட்டது.)

(3) ஆய்தத் தொடர் குற்றியலுகரம் — எஃது.

(4) வன்தொடர் குற்றியலுகரம் — சுக்கு.

(5) மென்தொடர் குற்றியலுகரம் — பந்து.

(6) இடைத்தொடர் குற்றியலுகரம்—மார்பு.

மேலே தனிக்குறிலை யடுத்துவரும் கு, சு, டு, து, பு றுக்கள் முற்றியலுகர மாகுமென்று கூறப்பட்டது. ஏனைய உகரமேறிய எழுத்துக்கள் (ஙு, ஞு, நு, மு, ரு, வு, ழு, ளு, னு தனிக்குறிலை யடுத்து வந்தாலும்,

இரண்டு, மூன்று முதலிய எழுத்துக்களை யடுத்து வந்தாலும் முற்றிய லுகரமாகும்.

உ-ம்: உறினு கணு, மநு, தும்மு, கரு, கவ்வு, ஏழு, பள்ளு, மனு.

பயிற்சி

(1) அஃது எங்கே போயிற்று.—இம்முற்றுத்தொடரில் உள்ள எழுத்துக்கள் ஒவ்வொன்றும், எங்கிருந்து பிறக்கிறது என்பதை எழுதுக.

(2) கீழ்க்காண்பவற்றை அசை பிரிக்க :—

| | | |
|---|---|---|
| வருகிறேன் | விறகு | கல்லாறு |
| நடப்பான் | காது | மரக்கிளை |
| மங்கலம் | பூமரம் | நால்வாய் |

(3) கீழ்க்காண்பவை என்ன அசைகள் என்று கூறுக.

| | | | |
|---|---|---|---|
| குடம் | அணு | புல் | கால் |
| போ | நட | வரால் | புனம் |

(4) க, ச, த, ப இவைகள் சொல்லின் முதல், இடை, கடைகளில் வேறுபட்ட ஒலிகளாக வருவதற்கு இரண்டிரண்டு உதாரணங்கள் தருக.

(5) கீழ்க்காணும் குற்றியலுகரங்களை வகைப்படுத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| நடந்து | மச்சு | எஃது | பட்டு | பஞ்சு |
| பயிறு | நாடு | சால்பு | விறகு | ஆறு |

(6) கீழ்க்காண்பவற்றிலுள்ள குற்றியலுகரங்களையும், முற்றியலுகரங்களையும் வகைப்படுத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| துண்டு | விடு | ஏறு | திரு | தபு |
| இஃது | கதவு | சுக்கு | கணு | சந்து |

## வினுக்கள்

(1) ஒலிவடிவம், வரிவடிவம் என்று எவைகட்குப் பெயர்?

(2) எவ்வொலிக் குறிப்புக்கள் ஒலி வடிவங்களாகா?

(3) எழுத்துக்களின் வகைகள் யாவை? ஒவ்வொரு வகை எழுத்தும், எவ்வெவ்விடங்களிலிருந்து பிறக்கின்றன?

(4) உயிர்ப்பு எழுத்துக்கள், ஒலிப்பு எழுத்துக்கள் என்பன யாவை? இரண்டிரண்டு உதாரணங்கள் தருக.

(5) மூக்குவழி ஒலிக்கும் எழுத்துக்கள் யாவை?

(6) நேரசைகள் எத்தனை? அவற்றை உதாரணங்களுடன் விளக்குக.

(7) நிரையசைகள் எத்தனை? அவை எவை?

(8) ஒரு வல்லெழுத்து, சொல்லின் முதல், இடை, கடைகளில் நின்று ஒலிப்பதில் வேறுபாடு யாது?

(9) குற்றியலுகரம் என்பது என்ன? அதன் வகைகளை உதாரணங்களுடன் எழுதுக.

(10) இன்ன வகையான குற்றியலுகரமென்று அறிவது எப்படி?

(11) முற்றியலுகரம் என்பது என்ன? நான்கு உதாரணங்கள் தருக.

# II. சொல்

1. டி　　　　2. போ

டெகுடை　　　　படித்தான்

முதலாவதில் உள்ள தனித்த எழுத்திற்கும், எழுத்துத் தொடருக்கும் பொருள் உண்டா என்று கவனியுங்கள். அவை எப்பொருளையும் தரவில்லையல்லவா? இரண்டாவதில் உள்ள தனித்த எழுத்திற்கும், எழுத்துத்தொடருக்கும் பொருள் உண்டென்று தெரிகிறது. ஆதலால், இரண்டாவதில் உள்ளவை இரண்டும் சொற்களாகும். ஓர் எழுத்து தனித்தோ, தொடர்ந்தோ பொருள் தருவது சொல் எனப்படும். சொல் பலவகைப்படும். அவற்றுள் சிலவற்றை ஈண்டுக் கவனிப்போம்.

## (1) சுட்டு, வினு சொற்கொத்துக்கள்

### (அ) சுட்டுப்பெயர்கள் :

அ, இ, உ என்பன சுட்டெழுத்துக்கள் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். இவற்றின் அடியாகப் பிறக்கும் பெயர் சுட்டுப்பெயராகும்.

இவற்றுள் உகரச்சுட்டுப்பெயர் செய்யுளில் மட்டும் வரும்.

உ-ம்: அவன், அவள், அவர், அது, அவை.
இவன், இவள், இவர், இது, இவை.
உவன், உவள், உவர், உது, உவை.

குறிப்பு : அகரம் தூரத்தில் உள்ளபொருளையும், இகரம் அண்மையில் உள்ள பொருளையும், உகரம் நடு, மேல், கீழ் இடத்துள்ள பொருளையும் சுட்டும்.

(ஆ) வினுப்பெயர்கள் :

எ, ஏ, யா, என்பன வினு எழுத்துக்கள் என்பதை அறிந்திருக்கிறீர்கள். இவற்றின் அடியாகப்பிறக்கும் பெயர் வினுப்பெயராகும். ஏ என்னும் எழுத்தின் அடியாகப்பிறக்கும் வினுப்பெயர் செய்யுளில்மட்டும் வரும்.

உ - ம் ; எவன், எவள், எவர், எது, எவை.
ஏவன், ஏவள், ஏவர், ஏது, ஏவை.
யாவன், யாவள், யாவர், யாது, யாவை.

## (2) இடுகுறிப்பெயரும் காரணப்பெயரும்

(அ) இடுகுறிப்பெயர் :

1. குள்ளன், கூனன், குருடன்.
2. இலே, கல், வாழை.

முதல் வரிசையில் உள்ள பெயர்ச்சொற்களேக் கவனியுங்கள். அவை, ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரணத்தால் ஏற்பட்டபெயர் என்பதுவிளங்கும். இரண்டாவது வரிசையில் உள்ள பெயர்ச்சொற்களுக்குக் காரணம் உண்டா என்று கவனியுங்கள். இவை காரணத்தால் ஏற்பட்டவை அல்ல என்பது விளங்கும். காரணமில்லாமல் ஒரு பொருளுக்கு நம்முன்னேர்களால் இட்டு வழங்கிய பெயர் இடுகுறிப்பெயர் எனப்படும. ஆகவே, இலே, கல், வாழை முதலியன இடுகுறிப்பெயர்களாகும்.

இடுகுறிப்பொதுப்பெயர், இடுகுறிச்சிறப்புப்பெயர் என்று இடுகுறிப்பெயர் இரண்டு வகைப்படும். பல இடுகுறிப்பெயர்களுக்குப் பொதுவாக இருக்கும் பெயர், இடுகுறிப் பொதுப்பெயராகும்.

உ - ம் : மரம், மாடு, நெல், மனிதன்.

ஆல், அரசு, தென்னை, வாழை முதலியவைகட்கு மரம் என்பது பொதுப்பெயராய் உள்ளதை யறிக. மற்றவைகளும் இவ்வாறே பலவற்றிற்குப் பொதுவாய் உள்ளமையை கீழே அறிந்து கொள்க.

பலவற்றிற்குப் பொதுவாக இராமல் தனித்துள்ள பெயரைச் சிறப்புப்பெயர் என்பர்.

உ - ம் : நாவல், எருது, சம்பா நெல், முருகன்.

மேற்கண்ட உதாரணத்தில் உள்ள பொதுப்பெயர்களுக்கு இவை சிறப்பாக உள்ளமையை அறிந்து-கொள்க.

(ஆ) காரணப்பெயர் :

மேலே குள்ளன், கூனன், குருடன் என்பன காரணப்-பெயர்கள் என்று அறிந்தீர்கள். இடுகுறிப் பெயரைப் போல இதுவும்காரணப்பொதுப்பெயர் என்றும், காரணச் சிறப்புப்பெயர் என்றும் இரண்டு வகைப்படும்.

உ - ம் : அணி — அணியப்படுவது அணி
பறவை — பறப்பது பறவை
உடை — உடுக்கப்படுவது உடை

இவை காரணப்பொதுப்பெயர்கள். இவை பல-வற்றிற்குப் பொதுவாய் உள்ளமையை அறிந்து கொள்க.

வளையல் — வளைந்திருப்பதால் வளையல் எனப்பட்டது.

மரங்கொத்தி — மரத்தைக் கொத்துவதால் மரங்கொத்தி எனப்பட்டது.

காற்சட்டை — காலில் அணிந்துகொள்வதால் காற்-சட்டை எனப்பட்டது.

இவை மேற்கண்ட பொதுப் பெயர்களுக்குச் சிறப்-பாக இருப்பதை அறிந்துகொள்க.

ஆகவே, பெயர்கள், இடுகுறிப் பொதுப்பெயர், இடு-குறிச் சிறப்புப்பெயர், காரணப்பொதுப்பெயர், காரணச் சிறப்புப்பெயர் என்று நான்கு வகைப்படும்.

### (3) சொற்கள் பெரும்பாலும் காரணப் பெயர்-களே என்பது

நம்மொழியில் காரணப்பெயர்கள் மிகுந்திருக்கின்-றன. நன்கு ஆராயாதவர்களுக்குக் காரணப்பெயர்-களின் காரணம் விளங்காது. ஆகவே, அவர்கள், கார-ணப்பெயர்களை இடுகுறிப்பெயர் என்றே எண்ணிக்-கொண்டிருப்பர். சொல்லின் காரணத்தை அறிந்தால் தான், படிப்பதின் பொருள் நன்கு விளங்கும். கீழே சில காரணப்பெயர்களும், அவற்றின் காரணங்களும்கொடுக்-கப்பட்டிருக்கின்றன. படித்தறிந்துகொள்ளுங்கள்.

| சொல் | காரணம் |
|---|---|
| அன்பன் | அன்புள்ளவன் |
| ஆழி | ஆழமாக இருப்பது (கடல்) |
| இளந்தோப்பு | இளமரங்கள் உள்ள தோப்பு |
| ஈட்டம் | சேர்ந்திருத்தல் (கூட்டம்) |
| உண்டி | உண்ணப்படுவது |
| ஊரன் | ஊரையாள்பவன் |
| எழுத்து | எழுதப்படுவது |
| ஏராளன் | ஏரை யாள்பவன் (குடியானவன்) |
| ஐவர் | தருமன் முதலியோர் |
| கடவுள் | யாவற்றையும் கடந்து நின்றவர் |
| காளி | கருநிற முடையவள் |

| | |
|---|---|
| கூனன் | கூனல் முதுகுடையவன் |
| கிளைஞர் | கிளைகள்போன்று பிரிந்துள்ளவர்(உறவினர்) |
| சரவணன் | சரவணப்பொய்கையில் பிறந்தவன் |
| சிவன் | தூய்மையானவன் |
| செங்கதிரோன் | சிவந்த கதிரை யுடையவன் (சூரியன்) |
| பருவம் | பருத்திருக்கும் நிலை |
| புரவலன் | பாதுகாப்பவன் (அரசன்) |
| மடையன் | மடைப்பள்ளியில் வேலை செய்வோன் |
| மாயோன் | கருநிறமுள்ளவன் |
| வெந்நீர் | வெம்மையான நீர் |

இலக்கணத்தில் உயிர், மெய், உயிர்மெய், குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம், சுட்டு, வினா, ஆய்தம், குற்றியலுகரம், குற்றியலிகரம், முற்றியலுகரம், பகுபதம், பகாப்பதம், எச்சம், முற்று ஆகியவைகளும், பிறவும் காரணப் பெயர்களே.

## (4) வழூஉச்சொல்லும் வழக்கும் அவற்றைத் திருத்துதலும்

நம் மொழியில் வழக்கமான சில வழூஉச் சொற்கள் கலந்திருக்கின்றன. இவை பெரும்பான்மையாகப் பேச்சு வழக்கில் இருந்து வருகின்றன; சிறுபான்மையாக எழுதுவதிலும் இருந்துவருகின்றன. அவற்றை அறிந்து திருத்திக்கொள்ள வேண்டும். இல்லாவிடில், நாம் அவற்றை அப்படியே பேசியும் எழுதியும் தவறு செய்து வருவோம். ஆதலால், கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வழூஉச் சொற்களையும் அவற்றின் திருத்தங்களையும் வாசித்து, நன்கு நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

| வழூஉச் சொல் | திருத்தம் |
|---|---|
| அதுகள் | அவை |
| ஆத்துக்கு | அகத்துக்கு |
| இரும்பல் | இருமல் |
| ஈர்வளி (ஈர்க்குளி) | ஈர்வலி |
| உத்தளவு | உற்றளவு |
| ஊர்சுத்து | உகிர்ச்சுற்று |
| எடக்கு | இடக்கு |
| ஏழரை நாட்டுச்சனி | ஏழரையாட்டைச் சனி |
| ஒட்டரை | ஒட்டடை |
| கடப்பாறை | கடப்பாரை |
| கார்ப்பான் | காப்பான் |
| கினவு | கனவு |
| கோர்த்து | கோத்து |
| சக்காளத்தி | சக்களத்தி |
| சாம்பராணி | சாம்பிராணி |
| செரங்கு | சிரங்கு |
| தலைசன் | தலைச்சன் |
| தேவலை | தாழ்வில்லை |
| திருவாணி | திருகாணி |
| தொப்புள் | கொப்பூழ் |
| நல்லெண்ணை | நல்லெண்ணெய் |
| நீஸ்த்தண்ணி | நிசித்தண்ணீர் |
| பாதாம் கொட்டை | வாதுமைகொட்டை |
| புடவை | புடைவை |
| பொடைத்தல் | புடைத்தல் |
| மானாவாரியாக | வானாவாரியாக |
| முகர்ந்து | மோந்து |
| வடவம் | வடகம் |

| | |
|---|---|
| வாணுள் | வாழ்நாள் |
| வெண்ணீர் | வெங்நீர் |
| வேக்குரு | வேர்க்குரு |

## (5) ஒரு பொருள் பல சொற்கள் பொருளில் நுட்பமாக வேறுபடுதல்

ஒரு பொருளைக் குறித்துப் பல சொற்கள் இருக்கின்றன. அவற்றுள் சில சிறிது பொருள் வேறுபாடு பெற்றிருத்தலுண்டு. அவற்றை யறியாவிடின், படிப்பதிலுள்ள கருத்துக்களின் நுட்பங்களைச் சரிவர அறிந்து கொள்ள முடியாது. ஆதலால், கீழ்க்காணும் சொற்களின் பொருள் நுட்பங்களை யறிந்து கொள்ளுங்கள்.

(1) மன்னன், காவலன், கொற்றவன், அரசன், இறைவன், புரவலன் என்பன அரசனை உணர்த்துஞ் சொற்கள். இவற்றின் நுட்பப் பொருள் வேறுபாடுகளாவன :

பெருமையை யுடையவன் மன்னன்.
காத்தலில் வல்லவன் காவலன்.
குடிகளுக்குத் தலைவன் இறைவன்.
பாதுகாப்பவன் புரவலன்.

(2) ஈ, தா, கொடு என்பன கேட்பதை யுணர்த்தும் சொற்கள். இவற்றின் நுட்பப் பொருள் வேறுபாடுகளாவன :

நம்மினும் உயர்ந்தவரிடத்து ஏதாவ தொன்றைக் கேட்கும்போது ஈ என்பதையும், நமக்கு ஈடானவரிடத்துக் கேட்கும்போது தா என்பதையும், நம்மினும் தாழ்ந்தவரிடத்துக் கேட்கும்போது கொடு என்பதையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

(3) கூறுதல், கிளத்தல், மொழிதல், பகர்தல், புகலுதல், கழறுதல் என்பன சொல்லுதல் என்பதை யுணர்த்துஞ் சொற்கள். இவற்றின் நுட்பப் பொருள் வேறுபாடுகளாவன :

ஒன்றை வகைப்படுத்திச் சொல்லுதல் கூறுதல் எனப்படும்.

ஒரு பொருளைக் குறிப்பிட்டுச் சொல்லுதல் கிளத்தல் எனப்படும்.

ஒவ்வொன்றையும் தெளிவுபடச் சொல்லுதல் மொழிதல் எனப்படும்.

பொருளின் விலையைச் சொல்லுதல் பகர்தல் எனப்படும்.

ஏதாவதொன்றை விரும்பிச் சொல்லுதல் புகலுதல் எனப்படும்.

ஏதாவதொன்றைப்பற்றிக் கடிந்து சொல்லுதல் கழறுதல் எனப்படும்.

(4) ஓடை, கால்வாய் என்பன நீரோடுமிடத்தைக் குறிக்குஞ் சொற்கள். இவற்றின் நுட்பப் பொருள் வேறுபாடுகளாவன :

இயற்கையாக ஏற்பட்ட நீரோடுமிடம் ஓடை.

மனிதரால் ஏற்படுத்தப்பட்ட நீரோடுமிடம் கால்வாய்.

(5) குளம், பொய்கை என்பன நீர் நிலையைக் குறிக்கும் சொற்கள். இவற்றின் நுட்பப் பொருள் வேறுபாடுகளாவன :

மனிதரால் ஏற்படுத்தப்பட்ட நீர்நிலை குளம்.

இயற்கையாக ஏற்பட்ட நீர்நிலை பொய்கை.

## பயிற்சி

(1) கீழ்க்காணும் சுட்டுப்பெயர்களையும், வினப்-பெயர்களையும் வகைப்படுத்துக.

இவை, அவர், உவன், உவள், யாவன், அது, ஏவர், உது, எது, யாது, எவர், அவை.

(2) கீழ்க்காண்பவற்றிற்குச் சிறப்புப் பெயர்கள் எழுதுக.

மரம், வீடு, மண், அணி, உண்டி, பறவை.

(3) கீழ்க்காண்பவற்றிற்குப் பொதுப் பெயர்கள் எழுதுக.

போளி, மீன்குத்தி, புன்னைமரம், குடிசை, புழுதி, மூக்குத்தி,

(4) கீழ்க்காண்பவற்றுள் பிழையானவற்றையும் சரியானவற்றையும் வகைப்படுத்துக.

உத்தளவு, எடக்கு, கொப்பூழ், வடகம், கோர்த்து, தலைச்சன், வாழ்நாள், புடவை, கினவு, வெந்நீர், காப்பான், தேவலை, சாம்பராணி, மோந்து, அதுகள் இரும்பல்.

(5) கீழ்க்காணும் காரணச் சொற்களுக்குக் காரணம் எழுதுக.

பறவை, அரைஞாண் கயிறு, மரங்கொத்தி, காற்றுடி, கார்காலம், எழுத்து, கொடை, உழவன், கவிஞர், கலைமகள், பகலவன்.

## வினக்கள்

(1) அண்மையிலும் சேய்மையிலும் உள்ளவற்றைக் குறிக்கும் சுட்டெழுத்துக்கள் எவை ?

(2) செய்யுளில் மட்டும் பயின்று வரும் சுட்டு, வின எழுத்துக்கள் எவை ?

(3) இடுகுறி, காரணப் பெயர்களின் இலக்கணங்களையும் (Definition) அவற்றின் வகைகளையும் எழுதுக.

(4) காரணப்பொது, சிறப்புப்பெயர்களுக்குஇரண்டிரண்டு உதாரணங்கள் தருக.

(5) குற்றமுள்ள சொற்களைக் கற்பதனால் உண்டாகும் தீமைகள் யாவை ?

(6) ஈ, தா, கொடு என்பவைகளுக்குள்ள பொருள் வேறுபாடுகள் யாவை ?

(7) புகலுதலுக்கும் கழறுதலுக்கு முள்ள பொருள் வேறுபாடு யாது ?

## (6) கால இடை நிலை

பாடு + இன் + ஆன் = பாடினான்

பாடினான் என்னுஞ் சொல் இறந்த காலத்தைக் குறிக்கிறது. இங்கு அச்சொல் மூன்ருகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அம்மூன்றனுள் எது காலத்தை அறிவிக்கிறது என்று கவனியுங்கள். நன்கு கவனித்தால் இடையில் உள்ள **இன்** என்பது புலனாகும். இஃது இடையில் உள்ளதால் இதனை இடை நிலை என்றும், காலத்தையும் குறிப்பதால் கால இடைநிலை என்றும் கூறுவர். காலத்தைக் குறிக்கும் இடை நிலைகள் இன்னவை என்று அறிஞர்கள் வரையறுத்திருக்கிறார்கள். அவை : இறந்த கால இடைநிலை, நிகழ்கால இடைநிலை, எதிர்கால இடை நிலை என்று மூன்று வகைப்படும். கீழே மூன்று கால இடை நிலைகளும், அவை சொல்லில் வரும் விதங்களும் காட்டப்பட்டிருக்கின்றன. அவற்றைப் படித்து அறிந்து கொள்ளுங்கள்.

1. இறந்தகால இடை நிலைகள் :

த், ட், ற், இன்

| சொல் | பகுதி | இடைநிலை | விகுதி |
|---|---|---|---|
| செய்தான் | செய் | த் | ஆன் |
| கண்டது | காண் | ட் | து |
| சென்றாள் | செல் | ற் | ஆள் |
| சொல்லினான் | சொல் | இன் | ஆன் |

2. நிகழ்கால இடை நிலைகள் :

கிறு, கின்று, ஆநின்று

| சொல் | பகுதி | இடைநிலை | விகுதி |
|---|---|---|---|
| செய்கிறான் | செய் | கிறு | ஆன் |
| செய்கின்றான் | செய் | கின்று | ஆன் |
| செய்யாநின்றான் | செய் | ஆநின்று | ஆன் |

3. எதிர்கால இடைநிலைகள் :

ப், வ்

| சொல் | பகுதி | இடைநிலை | விகுதி |
|---|---|---|---|
| தின்பான் | தின் | ப் | ஆன் |
| செல்வான் | செல் | வ் | ஆன் |

## (7) உரிச்சொல்

உரி என்பது பண்பு அல்லது குணம் என்று பொருள்படும். ஒரு சொல்லின் குணத்தை அறிவிப்பது உரிச்சொல் எனப்படும். அது பெயரையும், வினையையும் பற்றி வரும். பெயரைப்பற்றி வருவது பெயருரிச் சொல் எனப்படும் ; வினையைப் பற்றி வருவது வினை

யுரிச்சொல் எனப்படும். கீழே கொடுக்கப்பட்டிருக்கும் உரிச்சொற்களையும் அவற்றின் பொருள்களையும் கவனி-யுங்கள்.

1. பெயருரிச் சொல் :

| | |
|---|---|
| **சாலச்** சிறந்தது | = **மிகவும்** நல்லது |
| **உறு** பொருள் | = **மிகுந்த** பொருள் |
| **தவப்** பெரிது | = **மிகவும்** பெரியது |
| **நனி** பேதை | = **மிக்க** அறிவிலி |
| அன்பு **கூர்** மனம் | = அன்பு **மிகுந்த** மனம் |
| **கழி** கண்ணோட்டம் | = **மிகுந்த** கண்ணோட்டம் |

மேற்கண்டவற்றுள் சால, உறு, தவ, நனி, கூர், கழி என்பவற்றிற்குப் பொருள் ஒன்று பலவா என்று கவனியுங்கள். மிகுதி என்ற ஒரே பொருள்தான் என்று தெரிகிறதல்லவா ? ஆதலால், இவை, ஒருபொருள் குறித்த பல பெயருரிச் சொற்களாகும்.

| | |
|---|---|
| **கடி** நகர் | = **காவல்** பொருந்திய நகரம் |
| **கடி** நுனைப்பகழி | = **கூர்மையான** முனையை யுடைய அம்பு |
| **கடி** மணம் | = **புதிய** மணம் |
| **கடி** மலர் | = **மண** மலர் |
| **கடி** கொள்கணவாய் | = **அச்சந்** தரும் கணவாய் |
| **கடி** மார்பன் | = **ஒளி** தரும் மார்பன் |
| **கடி** இயம் | = **ஒலி** மிகுந்த ஒலிக் கருவி |
| **கடி** பொருள் | = **மிகுதியான** பொருள் |

மேற்கண்டவற்றுள் கடி என்பதற்குக் காவல் கூர்மை, புதிய, மணம், அச்சம், ஒளி, ஒலி, மிகுதி என்ற

பொருள்கள் வந்துள்ளன. ஆதலால், கடி யென்பது பல பொருள் குறித்த ஒரு பெயருரிச் சொல்லாகும்.

மேற்கண்டவை பெயரைத் தழுவி வந்துள்ளமையை அறிக.

2. வினையுரிச்சொல் :

சால வுண்டான் = **மிகுதியாக** வுண்டான்.
**நனி** தின்றான் = **மிகுதியாகத்** தின்றான்.
**தவப்** பெற்றான் = **மிகுதியாகப்** பெற்றான்.
கடி சென்றான் = **விரைந்து** சென்றான்.

மேற்கண்ட வினையுரிச் சொற்கள் வினையைத் தழுவி வந்துள்ளமையை அறிக. உரிச்சொல் தனித்து வாராது. ஒரு பெயரையோ வினையையோ தழுவியே வரும்.

## (8) இடைச்சொல்

சொற்களுக்கு இடையில் வருஞ்சொல்லை இடைச் சொல் என்பர். சிறுபான்மையாக இஃது ஒரு சொல்லின் இறுதியிலும் வரும். பெரும்பான்மையாக இடையில் வருவதைப்பற்றி இஃது இடைச்சொல் எனப்பட்டது. இஃது ஒரு சொல்லைத் தொடர்ந்து வருமே தவிர, தனித்து வாராது. அவற்றுள் சிலவற்றைப் இங்கே அறிந்து கொள்ளுங்கள்.

கண்ணனை அடித்தான்—**ஐ** வேற்றுமை உருபு.
புலி **போலப்** பாய்ந்தான்—**போல** உவம உருபு.
பனங்கொட்டை—**அம்** சாரியை.
பாடினான்—**இன்** சாரியை, **ஆன்** விகுதி.
நானும் நீயும்—**உம்** உம்மைச்சொல்.

**கலீர் கலீரென — குறிப்புச்**சொல்.
**நீதான் வந்தாய்—தான்** அசை.
**நீர்தாம் வந்திர்—தாம்** அசை.
**ஆ! என்ன அழகு!—ஆ** வியப்புச்சொல்.

ஐ, போல, அம், இன், ஆன், உம், குறிப்புச்சொல், (கலீர் கலீர்) தான், தாம், ஆ என்னும் இடைச்சொற்கள் சொற்களைச் சார்ந்து வந்துள்ளமையை அறிக.

குறிப்பு:— இங்குக் காட்டப்படாத ஏனைய வேற்றுமை உருபுகளும், இடைநிலைகளும், உவமை உருபுகளும், விகுதிகளுப், சுட்டெழுத்துக்களும், மற்று, கொல் என்பனவும் பிறவும் இடைச்சொற்களாகும்.

## (9) சாரியைகள்

புளியம்சோறு = புளி + அம் + சோறு.

மேற்கண்டதில் இரு சொற்களுக்கிடையே அம் என்பது வந்துள்ளது. இது சொற்களைச் சார்ந்தே வரும். அதனால் இதனைச் சாரியை என்பர்.

அத்து, அற்று, வற்று, அன், இன், தம், உ, ன் என்பவை சாரியைகளாக வரும். இவற்றுள் சில, விகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும்; சில, பகுதிக்கும் வேற்றுமை உருபிற்கும் இடையில் வரும்; சில, இரு சொற்களுக்கிடையே வரும். இவ்வாறு வருவதைக் கீழ்க்காணும் உதாரணங்களால் அறிக.

உ-ம்:

மரத்தை = மரம் + **அத்து** + ஐ
அவற்றை = அ + **அற்று** + ஐ

எல்லாவற்றையும் = எல்லா + **வற்று** + ஐ + உம்
அதற்கு = அது + **அன்** + கு
ஊரின்கண் = ஊர் + **இன்** + கண்
எல்லார்தம்மையும் = எல்லார் + **தம்** + ஐ + உம்
சீனனுக்கு = சீனன் + உ + கு
கோனை = கோ + **ன்** + ஐ

மேற்கண்டவை சொல்லைச் சார்ந்து வருவதால், சொற்சாரியைகள் எனப்படும். எழுத்துச் சாரியைகளு முண்டு. அவை: கரம், காரம், கான் என்பன.

உ-ம்:

அகரம், இகரம் — **கரம்**
ஆகாரம், ஈகாரம் — **காரம்**
அஃகான், மஃகான் — **கான்**

மேற்கண்ட மூன்று எழுத்துச் சாரியைகளும் அ, இ, ஆ, ஈ, ம் இவற்றைச் சார்ந்து வந்திருப்பதை அறிக.

மற்றவைகட்கும் இவ்வாறே அமைத்துப் படிக்கவும்.

பயிற்சி

(1) கீழ்க்காணும் சொற்களில் உள்ள இடைநிலைகளை எடுத்து எழுதுக.

பார்த்தான், கற்பாள், வாராநின்றார், விட்டான், கொல்கிறான், போயினான், ஓடுகின்றது, செல்வான்.

(2) கடி என்னும் உரிச்சொல்லை அமைத்து வேறு பொருள் தரும்படி ஆறு முற்றுத்தொடர்கள் (வாக்கியங்கள்) எழுதுக.

(3) பின் வருவனவற்றில் உள்ள இடைச்சொற்களைக் குறிப்பிடுக.

புலி போலப் பாய்ந்தான்.
இவ்வளவில் செல்லுங்கொல்.
அவனும் நானும் சென்றோம்.
அவர்தாம் பாடினர்.
ஓ! செய்துவிட்டாயே!
அவனுடைய மாடு.

(4) பின் வருவனவற்றில் உள்ள சாரியைகளை எடுத்தெழுதுக.

பொன்னினுடைய நிறம் யாது?
எல்லாவற்றையும் கண்டான்.
காலையம் பொழுது.
கற்பினுக் கணியைக் கண்டான்.
பலவற்றைக் கண்டான்.
என்றனைப் பார்த்துச் சிரித்தான்.

## வினாக்கள்

(1) மூன்றுகால இடைநிலைகள் யாவை? உதாரணங்களுடன் எழுதுக.

(2) உரிச்சொல்லின் வகைகள் யாவை? சால என்னும் உரிச்சொல் எந்த வகையைச் சார்ந்தது? ஏன்?

(3) கடி என்னும் உரிச்சொல்லுக்கு என்னென்ன பொருள்கள் உண்டு?

(4) பெயர்க்காரணம் தருக: இடைச்சொல், உரிச்சொல், சாரியை, இடைநிலை.

(5) எவ்வெவை இடைச்சொற்களாக வரும்?

(6) சாரியையின் வகைகள் யாவை? வகைக்கிரண்டு உதாரணங்கள் தருக.

## (10) ஆகுபெயர்

**ஊர்** சிரித்தது.

இதன் பொருளென்னவென்று கவனியுங்கள். ஊர் என்பதற்கு ஊரார் என்று பொருள் கொள்ளவேண்டும். ஊருக்கும் ஊரில் உள்ளவர்களுக்கும் தொடர்பு உண்டு. இவ்வாறு ஒரு பொருளின் பெயர், அதனேடு தொடர் புடைய மற்றெரு பொருளுக்குத் தோன்று தொட்டு ஆகி வருவது ஆகு பெயர் எனப்படும்.

ஆகுபெயர் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் முதலிய ஆறினையும் பற்றி வரும்.

1. பொருளாகு பெயர் :

ஒரு முதற் பொருளின் பெயர், அதன் சினைக்கு ஆகி வருவது பொருளாகு பெயர் எனப்படும். இதனை முதலாகு பெயர் என்றும் கூறுவர்.

உ - ம் : **தாமரை** பூத்தது.

தாமரை என்பது தாமரைக்கொடி, வேர், இலை முதலிய முதற்பொருளைக் குறிக்கும். அது, இங்கு அதன் சினையாகிய மலருக்கு ஆகி வந்தது. பூத்தது என்னும் வினை மலரைக் குறிக்கின்றது.

(2) இடவாகு பெயர் :

ஓர் இடத்தின் பெயர், அவ்விடத்தில் உள்ள பொருளுக்கு ஆகிவருவது இடவாகு பெயர் எனப்படும்.

உ - ம் : **சிதம்பரம்** சிரித்தது.

இதில் சிதம்பரம் என்ற இடத்தின் பெயர், அவ் விடத்திலுள்ள மக்களைக் குறித்ததை அறிக. சிரித்தது

என்னும் வினை, சிதம்பரத்திலுள்ள மக்களைக் குறித்தது.

(3) காலவாகு பெயர் :

ஒரு காலத்தின் பெயர் அக்காலத்தின் பொருளுக்கு ஆகி வருவது காலவாகு பெயர் எனப்படும்.

உ - ம் : **கார்** அறுத்தது.

இதில் கார் காலத்தின் பெயர், அக்காலத்தில் விளையும் நெல்லுக்கு ஆகி வந்ததை யறிக. அறுத்தது என்னும் வினை நெல்லைக் குறித்தது.

(4) சினையாகு பெயர் :

ஒரு சினைப் பொருளின் பெயர் அதன் முதற்பொருளுக்கு ஆகி வருவது சினையாகு பெயர் எனப்படும்.

உ - ம் : **வெற்றிலை** நட்டான்.

வெற்றிலைக் கொடியை நடுவது உண்டே தவிர, வெற்றிலையை நடுவதில்லை. ஆதலால், இங்குச்சினையின் பெயர், அதன் முதலுக்கு ஆகி வந்துள்ளதை யறிக. நட்டான் என்கிற வினை முதற்பொருளை யறிவித்தது.

குறிப்பு :—இது பொருளாகு பெயரோடு மாறுபட்டிருப்பதை யறிக.

(5) பண்பாகு பெயர் :

ஒரு பண்பு அதனையுடைய பொருளுக்கு (பண்பிக்கு) ஆகி வருவது பண்பாகு பெயர் எனப்படும். இதனைக்குணவாகு பெயர் என்றும்கூறுவர்.

உ - ம் : **வெள்ளை** ஏர் உழுதது.

இதில் வெள்ளை என்னும் பண்பின் பெயர் அதன் பண்பியாகிய எருதுக்கு ஆகிவந்ததை யறிக. உழுதது என்னும் வினை எருதை அறிவித்தது.

(6) தொழிலாகு பெயர் :

ஒரு தொழிலின் பெயர், அத்தொழிலை யேற்ற பொருளுக்கு ஆகி வருவது தொழிலாகு பெயர் எனப்படும்.

உ - ம் : **பொங்கல்** தின்றான்.

இதில் பொங்குதல் தொழில். அது அத்தொழிலை ஏற்ற பொருளுக்கு (பொங்கிச் செய்த உணவு) ஆகி வந்தது. தின்றான் என்னும் வினை, பொங்கிச் செய்த உணவைக் குறித்தது.

இவைகளே யல்லாமல், உவமவாகு பெயர், கருவி யாகு பெயர் என்பவைகளும் உண்டு.

உ - ம் : உவமவாகு பெயர் : **காளை** வந்தான் (காளை போன்றவன் வந்தான்.)

கருவியாகு பெயர் : **நாலடியார்** படித்தான்.

நான்கடிகளால் ஆன வெண்பாக்களால் இயற்றப் பட்டு இருத்தலின் நாலடியார் எனப்பட்டது. நாலடி வெண்பா, நூல் இயற்றுவதற்குக் கருவியாகலின் நாலடி யார் என்பது கருவியாகு பெயர் எனப்பட்டது.

## (11) வெளிப்படையும் குறிப்பும்

1. இராமன் வந்தானா ?
2. அந்த நாய் வந்தானா ?

முதல் முற்றுத் தொடரின் (வாக்கியத்தின்) பொருள் நன்ருக விளங்குகிறது. இரண்டாவது முற்றுத் தொடரில் நாய் என்பது ஒரு பிராணியைக் குறிக்காமல் நாய்போன்றவனைக் குறிக்கிறது. ஆதலால், பொருள் புரிந்து கொள்ளும்படியாக இருப்பதை வெளிப்படை என்றும், குறிப்பாகப் பொருளைப் புரிந்து கொள்ளும் வகையில் இருப்பதைக் குறிப்பு என்றும் சொல்லுவார்கள்.

குறிப்பு: ஒன்ருெழி பொதுச்சொல், விகாரம், தகுதி, ஆகுபெயர், அன்மொழித்தொகை, வினைக் குறிப்பு, முதற் குறிப்பு, தொகைக் குறிப்பு, பிற குறிப்பு என்று குறிப்பு பலவகைப்படும்.

(1) ஒன்றொழி பொதுச்சொல் :

இரண்டுக்குப் பொதுவான சொற்களுள், ஒன்றை ஒழித்து மற்ருென்றைக் குறிப்பால் உணர்த்துவது ஒன்ருெழி பொதுச்சொல் எனப்படும்.

உ-ம்: இம்மாடு இன்று உழுதது.

எருதையும் பசுவையும் மாடு என்று சொல்லுவதுண்டு. எருதை ஏரில் பூட்டி உழுவது வழக்கமே தவிர, பசுவைப் பூட்டி உழும் வழக்கமில்லை. ஆதலால், உழுதது என்ற வினைமுற்றினல் மாடு என்பதற்குக் குறிப்பாக எருது என்று பொருள் கொள்ளுகிருேம்.

(2) விகாரம் :

சொல்லின் வேறுபாடு விகாரம் எனப்படும். இவ் விகாரம் வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்

தல், தொகுத்தல், முதற்குறை, இடைக்குறை, கடைக் குறை என்று ஒன்பது வகைப்படும்.

உ-ம்: ‘இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே’ என்பதில் ‘ஊன்று கோல்’ என்பது ஊற்றுக் கோல் என வந்திருக்கிறது. ன் என்ற மெல் லெழுத்திற்குப் பதிலாக ற் என்ற வல்லெழுத்து வந்திருப்பதால் இது, வலித்தல் விகாரம்எனப் படும். மற்றவைகளை வாய்ப்பு நேருங்கால் அறிந்து கொள்க. இது குறிப்பால் பொருள் உணர்த்துவதை யறிக.

(3) தகுதி :

தகாத சொல்லை நீக்கி, தகுதியான சொல்லால் ஒன்றை அறிவிப்பது தகுதி எனப்படும்.

உ-ம்: நீங்கா நித்திரை போயினர். (இறந்தார்.)

இறந்தார் என்று கூறுதல் தகாதது எனக்கருதி, இவ்வாறு கூறுதல் உண்டு. நீங்கா நித்திரை என்பது குறிப்பால் இறப்பு என்னும் பொருள் தருவதை நோக்குக.

(4) ஆகுபெயர் :

ஒரு பொருளின் பெயர் அதனோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்குத் தொன்றுதொட்டு ஆகிவருவது ஆகுபெயர் எனப்படும்.

உ-ம்: இனிப்பு என்ன இருக்கிறது.

இனிப்பு என்பது இனிப்புச் சுவையை யுடைய பொருளைக் குறிப்பதை நோக்குக.

(5) அன்மொழித் தொகை :

ஒரு தொகைச் சொல்லின் ஈற்றில் அல்லாத மொழி தொக்கி வருவது அன்மொழித் தொகை எனப்படும்.

உ - ம் ; பொற்றொடி வந்தாள்.

வந்தாள் என்பதின் குறிப்பினால், பொற்றொடி என்பது பொன்னால் ஆகிய வளையலை யுடையவள் என்று பொருள் படுவதை நோக்குக.

(6) வினைக்குறிப்பு :

வினையைக் குறிப்பாகக் காட்டுஞ்சொல், வினைக் குறிப்பு எனப்படும்.

உ - ம் : இவன் இப்பொழுது நல்லவன்.

இதில் இப்பொழுது என்பதின் குறிப்பினால், முன்பு கெட்டவனாய் இருந்தான் என்னும் பொருள் குறிப்பாக அறியப்படுவதை நோக்குக.

(7) முதற் குறிப்பு :

ஒரு பொருளின் பெயர், முதலில் நின்று அப்பொருளை அறிவிப்பது முதற் குறிப்பு எனப்படும்.

உ - ம் : ஆத்திசூடி படி.

இதில் ஆத்திசூடி என்னும் முதற் குறிப்பு, படி என்னும் குறிப்பினால், ஆத்திசூடி என்னும் நூலின் பெயரை உணர்த்திற்று.

(8) தொகைக் குறிப்பு :

ஓர் எண்ணின் தொகையினால் அத்தொகையுடைய பொருளைக் குறிப்பது தொகைக் குறிப்பாகும்.

உ - ம் : ஐவருள் மூத்தவன் தருமன்.

இதில் ஐவர் என்னும் தொகைச்சொல் தருமன் என்பதனால் பாண்டவரைக் குறித்ததை நோக்குக.

(9) பிற குறிப்பு :

பிறவற்றால் வருங்குறிப்பு பிற குறிப்பாகும்.

உ - ம் : (1) பூவா வஞ்சி.

வஞ்சி என்பது ஒரு மரமாயினும், பூவா என்பதனால் அது வஞ்சி நகரத்தைக் குறித்தது.

(2) கல்லைக் கடிக்க நன்கு சமைத்தாய்.

இது நன்றாகச் சமைக்கவில்லை என்னும் குறிப்புப் பொருளைத் தந்தது.

## (12) இயல்பு வழக்கும் தகுதி வழக்கும்

பேச்சில் நீண்ட காலமாகப் பயின்று வருவதை வழக்கு என்பார்கள். அஃது, இயல்பு வழக்கு தகுதி வழக்கு என்று இரண்டு வகைப்படும்.

(1) இயல்பு வழக்கு :

ஒரு பொருளுக்கு இயல்பாக அமைந்த சொல்லால், அப்பொருளைக் குறிப்பது இயல்பு வழக்கு எனப்படும். இஃது, இலக்கணமுடையது, இலக்கணப் போலி, மரூஉ என்று மூன்று வகைப்படும்.

(அ) இலக்கண முடையது : முன்னோர் வழங்கிவந்த இலக்கணப்படியே சொற்கள் வழங்குவது இலக்கண முடையதாகும்.

உ - ம் : மலை, வீடு, தின்றான், பார்த்தான்.

(ஆ) இலக்கணப் போலி : இலக்கணமுடைய சொற்களைப்போல அமைந்திராவிடினும், இலக்கணமுடையது போல அறிஞர்களால் கொள்ளப்படுவது இலக்கணப் போலியாகும்.

உ - ம் : வாயில், முன்றில், நுனிமரம்.

இல்வாய், இல்முன், மரநுனி என்னுஞ் சொற்கள், மேற்கண்டவாறு முன் பின்னாக மாறியிருக்கின்றன. ஆயினும், இவற்றின் பொருள் மாறவில்லை. இவ்வாறு வருபவை இலக்கணப் போலிகள் எனப்படும்.

(இ) மரூஉ : சொற்கள் சிதைந்து வருவது மரூஉ எனப்படும்.

| உ - ம். சொல் | மரூஉ |
|---|---|
| காஞ்சீபுரம் | காஞ்சி |
| கோயம்புத்தூர் | கோவை |
| நாகப்பட்டினம் | நாகை |
| பெயர் | பேர் |
| யாறு | ஆறு |
| யானை | ஆனை |
| சோழநாடு | சோணாடு |

(2) தகுதி வழக்கு:

பொருள்களுக்கு இயல்பாக ஏற்பட்டுள்ள சொற்களை யொழித்து, அவைகட்குத் தகுதியான சொற்களால் அப்பொருள்களைக் குறிப்பது தகுதி வழக்கு எனப்படும். அவ்வழக்கு **இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி** என்று மூன்று வகைப்படும்.

(அ) இடக்கரடக்கல் :—இழிந்த பொருள்களைக் குறிக்கும் இடக்கான சொற்களை ஒழித்து, அவைகட்குத் தகுதியான வேறு சொற்களை அமைப்பது இடக்கரடக்கல் எனப்படும்.

உ-ம் : **கொல்லைக்குப் போனான்.**

மலங்கழிக்கப் போனான் என்று சொல்வது இழிவாக இருத்தலின், அதனை ஒழித்து, தகுதியான சொல்லால் அதைக் குறித்திருப்பதை நோக்குக.

(ஆ) மங்கலம் : மங்கல மல்லாததை நீக்கி மங்கலமாகச் சொல்வது மங்கலம் எனப்படும்.

உ-ம் : இன்று ஒரு பெரியார் **துஞ்சினார்.** அவர் உடல் **நன்காட்டிற்கு** எடுத்துச் செல்லப்பட்டது.

இவற்றுள் இறந்தார் என்பதைத் துஞ்சினார் என்றும், சுடுகாடு என்பதை நன்காடு என்றும் குறித்துள்ளதை யறிக.

(இ) குழூஉக்குறி : ஒரு கூட்டத்தார் ஒரு பொருளுக்கு இயல்பாக அமைந்த சொல்லை நீக்கி, தமக்கு மட்டும் விளங்குமாறு வேறொரு சொல்லைக் குறிப்பாக அமைத்துக் கொள்வது குழூஉக்குறி எனப்படும்.

உ-ம் : **வெள்ளைக்குதிரை** ஏறினான். (கள் குடித்தான்) மாட்டுத்தரகர்கள் மூன்று ரூபாவைக் குணவெள்ளை என்பதும் குழூஉக்குறி யாகும்.

பயிற்சிகள்

(1) கீழ்க்காணும் ஆகுபெயர்களை இன்ன வகைகளென்று எழுதுக.

காரம் தின்றான்.
மயில் வந்தாள்.

தலைக்கு ஓர் அணை கொடு.
உலகம் நடுங்கிற்று.
எனக்கு வற்றல் மிகவும் விருப்பம்.
அல்லி வாடியது.
மருக்கொழுந்து நட்டான்.
கோடை விளைந்தது.

(2) கீழ்க்காண்பவை இன்ன குறிப்புக்கள் என்று எழுதுக.

கொன்றை வேந்தன் அகப்பட்டது.
அவன் முன்பு பொன்னன்.
பாயாத வேங்கை.
சிறுநீர் கழிக்கப் போனேன்.
ஆயிரம் மக்கள் போரிட்டனர்.
மரை மலர்.
வெள்ளை வந்ததா ?
தேமொழி வந்தாள்.

(3) கீழ்க்காணும் வழக்குகளை வகைப்படுத்துக.

புறநகர்.
பாண்டி நாடு.
இறைவனொடு ஐக்ய மாயினார்.
இன்று திருமுகம் வந்தது.
பெட்டியைத் திறந்தேன்.
வெளிக்கு வரவே யில்லை.
இன்று நான் கறுப்பு குடிக்கவில்லை.

## வினாக்கள்

(1) ஆகுபெயரின் இலக்கணம் (Definition) யாது ?

(2) ஆகுபெயரின் வகைகள் யாவை ? வகைக்கோர் உதாரணம் தருக.

(3) பொருளாகு பெயரோடு மாறுபடும் ஆகுபெயர் எது? காரணமும் தருக.

(4) திருக்குறள் படித்தான், கிளி பேசினுள்—இவற்றில் உள்ளவை என்ன ஆகுபெயர்கள்?

(5) குறிப்புப் பொருள் தருவன யாவை? அவற்றுள் எவையேனும் ஐந்திற்கு உதாரணம் தருக.

(6) தகுதி வழக்கின் வகைகள் யாவை? உதாரணந் தருக.

(7) இலக்கணப் போலிக்கும் மரூஉக்குமுள்ள வேறுபாடி யாது?

(8) பிற குறிப்பிற்கும், ஒன்றெழி பொதுச் சொல்லுக்கும் ஒவ்வோருதாரணம் தருக.

# III. தொடராக்கம்

1. சினன் வந்தான் போய் கடைக்கு.
2. சினன் கடைக்குப் போய் வந்தான்.

முதலாவதாக உள்ளதில் சொற்கள் தொடர்ந்திருக்கின்றன. ஆயினும் பொருள் தரவில்லை. இரண்டாவதாக உள்ளதில் சொற்கள் தொடர்ந்து பொருள் தருகின்றன. இவ்வாறு பொருள் பொருத்தமுறச் சொற்களை அமைப்பதைத் தொடராக்கம் என்பார்கள். தொடராக்கம் இரண்டு வகைப்படும். அவை : தொகைநிலைத்தொடர். தொகாநிலைத்தொடர் எனப்படும்.

## (1) தொகைநிலைத்தொடர்

வேற்றுமை உருபு முதலியவை தொக்கி (மறைந்து) நிற்க, சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து நிற்பது, தொகைநிலைத்தொடர் எனப்படும். அஃது ஆறு வகைப்படும். அவை யாவன :

1. வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்
2. வினைத் ,,
3. பண்புத் ,,
4. உவமைத் ,,
5. உம்மைத் ,,
6. அன்மொழித் ,,

(அ) வேற்றுமைத் தொகை :

வேற்றுமை யுருபுகள் தொக்கி வருவது வேற்றுமைத் தொகை எனப்படும் ; தொகாமல் வருவது வேற்றுமை விரி எனப்படும்.

உ - ம் : நிலம் உழுதான். (வேற்றுமைத் தொகை)
நிலத்தை உழுதான். (வேற்றுமை விரி.)

மற்ற வேற்றுமைகட்கும் இவ்வாறே கொள்க.

(ஆ) வினைத் தோகை :

பெயர்ச் சொல்லைத் தழுவி வரும் ஒரு வினையின் பகுதி வினைத்தொகை எனப்படும். இதில் மூன்று காலங்களும் தொக்கி நிற்கும்.

உ - ம் : கொல்யானை, சுடுசோறு, செய்வினை.

கொல்யானை என்பது கொன்றயானை, கொல்கின்ற யானை, கொல்லும் யானை என்று மூன்று காலங்கட்கும் பொருள் பட்டு வரும். ஏனையவைகட்கும் இவ்வாறே பொருள் விரித்து அறிந்து கொள்க.

(இ) பண்புத் தோகை :

பண்பை (குணத்தை) அறிவிக்கும் ஆகிய என்னுஞ் சொல் தொக்கி வருவது பண்புத் தொகையாகும்.

உ - ம் : செங்கை, கருங்குதிரை, தண்ணீர்.

செங்கை யென்பது செம்மையாகிய கை என்று விரியும். மற்றவைகட்கும் இவ்வாறே பொருள் அறிந்து கொள்க.

(ஈ) உவமைத் தோகை :

உவமானத்திற்கும் உவமேயத்திற்கும் இடையில் உவமை உருபு தொக்கி வருவது உவமைத் தொகை-யாகும்.

உ - ம் : பால்மொழி, மலர்க்கை, பொன்மேனி.

பால்மொழி என்பது பால் போன்ற மொழி என்று விரியும். மற்றவைகட்கும் இவ்வாறே பொருள் அறிந்து-கொள்க.

(உ) உம்மைத் தொகை :

நிலைமொழி வருமொழிகளின் ஈற்றில் உம் என்ற இடைச்சொல் தொக்கி வருவது உம்மைத்தொகை யாகும்.

உ • ம் : ஒன்றரை, பால்பழம், கால்கை

ஒன்றரை யென்பது ஒன்றும் அரையும் என்று விரியும். மற்றவைகட்கும் இவ்வாறே பொருள் அறிந்து கொள்க.

(ஊ) அன்மொழித்தொகை :

மேற்கூறப்பட்ட ஐந்து தொகைகளின் ஈற்றில் வேறுமொழி தொக்கி வருவது அன்மொழித்தொகை யாகும். (அல்+மொழி + தொகை = அல்லாதமொழி தொக்கி வருவது.)

பூக்குழல் வந்தாள் (பூவணிந்துள்ள கூந்தலை யுடையவள் வந்தாள்.) இதில் பூக்குழல் என்ற வேற்றுமைத் தொகையின் ஈற்றில் **உடையவள்** என்ற அல்லாத மொழி தொக்கியுள்ளது. ஆதலால், இஃது **அன்மொழித்தொகையாகும்.** அன்மொழித்தொகை மற்ற தொகைகளின் மீதும் இவ்வாறே வரும்.

## (2) தொகாநிலைத்தொடர்

வேற்றுமை உருபு முதலியவை தொக்கி நிற்காமல், சொற்கள் ஒன்றோ டொன்று தொடர்ந்து வரும் தொடர் தொகாநிலைத்தொடர் எனப்படும். இத்தொடர் ஒன்பது வகைப்படும்.

1. எழுவாய்த் தொடர் :

உ - ம் : சீனன் சினந்தான்.

இதில் சினந்தான் என்னுஞ் சொல், சீனன் என்னும் எழுவாயுடன் தொடர்ந்து வந்துள்ளதை யறிக.

2. விளித் தொடர் :

உ - ம் : வரதா ! வா.

இதில் வா என்னுஞ் சொல், விளிக்கப்படும் பெயர்ச்-சொல்லோடு தொடர்ந்து வந்துள்ளதை யறிக.

3. வேற்றுமைத் தொடர் :

உ - ம் : மரத்தை வெட்டினுன்.

இதில் வேற்றுமை யுருபுடன், சொல் தொடர்ந்து வந்துள்ளதை யறிக.

4. வினையெச்சத் தொடர் :

உ - ம் : வந்து போனுன்.

இதில் வந்து என்கிற வினையெச்சத்துடன், வினை-முற்றுச்சொல் தொடர்ந்து வந்துள்ளதை யறிக.

5. பெயரெச்சத் தொடர் :

உ – ம் : வந்த பையன்.

இதில் வந்த என்னும் பெயரெச்சத்தோடு, பையன் என்னும் பெயர்ச்சொல் தொடர்ந்து வந்துள்ளதை யறிக.

6. வினைமுற்றுத் தொடர் :

உ - ம் : வந்தான் கந்தன்.

இதில் கந்தன் என்னுஞ் சொல், வந்தான் என்னும் வினைமுற்றேடு தொடர்ந்து வந்துள்ளதை யறிக.

7. இடைச்சொல் தொடர் :

உ - ம் : மற்றுப் பெரிது.

இதில் மற்று என்னும் இடைச்சொல்லோடு, வேறொரு சொல் தொடர்ந்து வந்துள்ளதை யறிக.

8. உரிச்சொல் தொடர் :

உ - ம் : நனி தின்றான். (நனி=மிகுதி)

இதில் நனி என்னும் உரிச்சொல்லோடு, வேறொரு சொல் தொடர்ந்து வந்துள்ளதை யறிக.

9. அடுக்குத் தொடர் :

உ - ம் : பாம்பு! பாம்பு!!
போ, போ, போ.

இவற்றில் சொற்கள், அடுக்காகத் தொடர்ந்து வந்துள்ளதை யறிக.

பயிற்சி

(1) கீழ்க்காணும் தொகைநிலைத்தொடர்களையும், தொகாநிலைத்தொடர்களையும் வகைப்படுத்துக.

| | |
|---|---|
| வீடு சென்றான் | ஓடிய குதிரை |
| மரம் வெட்டினான் | ஊர் நீங்கினான் |
| கொன்றான் பாம்பை | மாட்டுவால் |
| சாலத் தின்றான் | வா வா |

(2) கீழ்க்காண்பவை இன்ன வேற்றுமைத்தொகை என்று எழுதவும்.

| | |
|---|---|
| கல்லெறிந்தான் | மரக்கிளை |
| தட்டான் மகன் | மலையருவி |

(3) கீழ்க்காண்பவை இன்ன தொகைநிலைத்தொடர்-களென்று எழுதுக.

| | |
|---|---|
| விடு கணை | கண்ணன் துணி |
| கடுஞ்சினம் | தேமொழி வந்தாள் |
| இரவு பகல் | வேல் கண் |

(4) கீழ்க்காண்பவை இன்ன தொகாநிலைத்தொடர்களென்று எழுதுக.

| | |
|---|---|
| மேய்ந்த மாடு | விழுந்தான் வேலன் |
| போய்ப் பார்த்தான் | குருவி பறந்தது |
| தேள் தேள் | மாடிமேல் விளக்கு |
| நானும் நீயும் | கடி நகர் |

## வினாக்கள்

(1) சொற்றொடர் என்பது என்ன? அதன் வகைகள் யாவை?

(2) தொகைநிலைத்தொடர் என்பது என்ன?

(3) தொகாநிலைத்தொடரின் வகைகள் யாவை?

(4) கருங்குழல், தேமொழி என்பன என்ன தொகை நிலைத் தொடர்கள்?

(5) எழுவாய்த் தொடருக்கும் வினைமுற்றுத் தொடருக்கும் வேறுபாடு யாது?

(6) பெயரெச்சம் வினையா? பெயரா?

(7) வினையெச்சத்திற்கும் பெயரெச்சத்திற்குமுள்ள வேறுபாடு யாது?

# IV. புணர்ச்சி

வரதன் வந்தான்.

இதில் வரதன் என்பது நிலைமொழி; வந்தான் என்பது வருமொழி. இவ்விரண்டும் தொடர்ந்து வருதலைப் புணர்ச்சி என்பார்கள்.

காளி + கோயில் = காளி கோயில்

இதில் நிலைமொழி வருமொழிகள் புணரும் போது எவ்வித மாறுபாடும் உண்டாக வில்லை. இவ்வாறு வருவதை இயல்புப் புணர்ச்சி என்பார்கள்.

பசுவை + பார்த்தான் = பசுவைப் பார்த்தான்.

இப்புணர்ச்சியில் எழுத்து தோன்றி யிருக்கிறது. இவ்வாறு தோன்றுவதோ, கெடுவதோ, திரிவதோ உண்டானல், அதை விகாரப்புணர்ச்சி என்பார்கள்.

## (1) உயிர்முன் உயிர்

நிலைமொழியீற்று உயிரும், வருமொழி முதல் உயிரும் புணர்வது உயிர்முன் உயிர் புணர்தலாகும்.

மணி + அழகு

மேற்கண்ட இரண்டு சொற்களையும் சேர்த்துப் படியுங்கள். ஓசை தடைப்படும். இவ்விரண்டும் உடன்படாமல் இருக்கின்றன. இவ்வாறு வருபவற்றை உடன்படுத்தும்மெய்கள் இரண்டு உண்டு. அவை: **ப், வ்** என்பனவாகும். இவற்றை **உடம்படு மெய்கள்** என்பார்கள். இவை பயின்று வருவதைக் கீழே காணுங்கள்.

உ - ம் :

உமி + ஒழிந்தது—உமி + ய் + ஒழிந்தது = உமியொழிந்தது
தீ + எழுந்தது—தீ + ய் + எழுந்தது = தீயெழுந்தது
பூ + அழகு—பூ + வ் + அழகு = பூவழகு
கோ + எழுந்தான்—கோ + வ் + எழுந்தான் = கோவெழுந்தான்.

## (2) உயிர் முன் மெய்

உயிரீற்று மொழிகளின் முன்பு வருகின்ற க, ச, த, பக்கள் பொதுவாகப் பெரும்பாலும் மிகும்.

உ - ம் : அடி + தண்டு = அடித்தண்டு
பூ + செடி = பூச்செடி
வாழை + பழம் = வாழைப்பழம்

உயிரீற்று மரப்பெயர்களின் முன்பு வருகின்ற க, ச, த, பக்கள் மிகுதலுண்டு ; அவற்றின் இனவெழுத்து மிகுதலுமுண்டு. அவற்றின் இனங்களாவன :

க்—ங், ச்—ஞ், த்—ந், ப்—ம்.

உ - ம் :
பலா + காய் = பலாக்காய்
அத்தி + பிஞ்சு = அத்திப் பிஞ்சு
பெட்டி + சாவி = பெட்டிச்சாவி
அந்த + தீமை = அந்தத் தீமை
} க, ச, த, ப மிக்கன.

மா + பழம் = மாம்பழம்
விளா + காய் = விளாங்காய்
} இனவெழுத்துக்கள் மிக்கன.

பூ என்னுஞ் சொற்குமுன் வல்லெழுத்துக்கள் மிகும்; அவற்றின் இனங்களும் மிகுதலுண்டு.

உ - ம் : பூ + கடை = பூக்கடை
பூ + குழல் = பூங்குழல்
பூ + பந்தல் = பூப்பந்தல்
பூ + பந்தல் = பூம்பந்தல்

## (3) மெய்ம்முன் மெய்

ணகர, னகரமெய் ஈற்றுச் சொற்களின் முன் வல்லினம் வந்தால், ணகரம் டகரமாகவும், னகரம் றகரமாகவும் திரியும்.

உ - ம் : மண் + குடம் = மட்குடம்
பொன் + சட்டி = பொற்சட்டி

மேற்கண்ட மெய்களுக்குமுன் மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாகும்.

உ - ம் : கண் + மணி = கண் மணி
மண் + விலை = மண் விலை
பொன் + மணி = பொன் மணி
பொன் + வேலை = பொன் வேலை

லகர, ளகர மெய் ஈற்றுச் சொற்களின்முன் வல்லினம் வந்தால், லகரம் றகரமாகவும், ளகரம் டகரமாகவும் திரியும்.

உ - ம் : கல் + சட்டி = கற்சட்டி
கள் + குடம் = கட்குடம்

லகர ளகர மெய்களுக்கு முன் மெல்லினம் வந்தால், லகரம் னகரமாகவும் ளகரம் ணகரமாகவும் திரியும்; இடையினம் வந்தால் இயல்பாகும்.

உ - ம் : பல் + மலர் = பன்மலர்
முள் + மரம் = முண்மரம்

கல் + யானை = கல்யானை
தோள் + வலி = தோள்வலி

### (4) மெய்ம்முன் உயிர்

நிலைமொழி யீற்றில் மெய்யெழுத்து இருக்க, வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால், நிலைமொழி யீற்று மெய்மீது வருமொழி முதல் உயிர் ஏறி நிற்கும்.

உ - ம் : வால் + அழகு = வாலழகு
கோள் + உரைத்தான் = கோளுரைத்தான்.

நிலைமொழியில் தனிக்குறிலை அடுத்து மெய்யெழுத்து இருந்து, வருமொழி முதலில் உயிர் இருந்தால், நிலைமொழி யீற்று மெய் இரட்டிக்கும்.

உ - ம் : சொல் + அழகு = சொல் + ல் + அழகு = சொல் [லழகு
கல் + எறிந்தான் = கல் + ல் + எறிந்தான் = கல் [லெறிந்தான்

### (5) மகர மெய்யீற்றுப் புணர்ச்சி

மகர மெய்யீற்றுச் சொல்லின் முன் வல்லினம் வந்தால், அம்மகரமெய் கெட்டு வந்த வல்லெழுத்து மிகும்.

உ - ம் : மனம் + கோட்டை = மனக்கோட்டை
வட்டம் + பலகை = வட்டப்பலகை.

சில மகர ஈற்றுச் சொற்களின் முன் வல்லினம் வந்தால், வந்த வல்லினத்தின் இனமாக ஈற்று மகரம் திரிதலுண்டு.

உ - ம் : மனம் + சலித்தான் = மனஞ்சலித்தான்
பணம் + தந்தான் = பணந்தந்தான்.

மகரஈற்றுச் சொற்களின் முன் மெல்லினமும் இடையினமும் வந்தால் மகரம் கெடும் ; உயிர் வந்தால் மகரம் கெட்ட பின்பு உடம்படுமெய் தோன்றும்.

உ - ம் : மரம் + நார் = மரநார்
மரம் + வேர் = மரவேர்
மரம் + உரி = மரவுரி.

## (6) எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி

(அ) ஒன்று முதல் எட்டு ஈறுகவுள்ள எண்ணுப் பெயர்கள் வருமொழிகளோடு புணருமிடத்து,

(1) ஒன்று, இரண்டு ஆகிய எண்களின் முதலில் உள்ள குறில் நீண்டு அவை, முறையே ஓர், ஈர் என்றுகும்;

உ - ம் : ஒன்று + கால்வாய் = ஓர் கால்வாய்
இரண்டு + ஆடு = ஈராடு.

குறிப்பு : இவை, ஒன்று கொடுத்தான், இரண்டு கண்டான் என இயல்பாகப் புணர்தலு முண்டு.

(2) மூன்று, ஆறு, ஏழு எண்களின் முதலில் உள்ள நெடில் குறுகும் ;

உ - ம் : மூன்று + கனி = முக்கனி
ஆறு + கால் = அறுகால்
ஏழு + கடல் = எழுகடல்.

(3) நான்கு, ஐந்து, எட்டு என்னும் எண்களின் ஈற்று எழுத்து கெடும்.

உ - ம் : நான்கு + மணி = நான்மணி
ஐந்து + கணை = ஐங்கணை
எட்டு + வகை = எண்வகை.

(ஆ) இருபது முப்பது என்று எண்பது வரையுள்ள எண்களின் முன், ஆயிரம் என்பது புணரும்போது இன் சாரியை தோன்றும்.

உ-ம்: இருபது + ஆயிரம் = இருபதினாயிரம்
முப்பது + ஆயிரம் = முப்பதினாயிரம்

எண்பதுவரை இவ்வாறே அமைத்துப் படித்து அறிந்துகொள்க.

(இ) பத்து என்பதனோடு ஒன்று, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு முதலிய எண்கள் புணரும் போது, பத்து என்பதிலுள்ள ஈற்று எழுத்து கெட்டு இன்சாரியை தோன்றும்.

உ-ம்: பத்து + ஒன்று = பதினொன்று
பத்து + மூன்று பதின்மூன்று.

மற்றவற்றோடும் இவ்வாறே ஒட்டுக.

(ஈ) பத்தோடு இரண்டுசேரும்போது பன்னிரண்டு என்று வரும்.

பத்தோடு ஒன்பது சேரும்போது பத்தொன்பது என்று வரும்.

ஒன்பதோடு பத்து சேரும்போது தொண்ணூறு என்று வரும்.

ஒன்பதோடு நூறு சேரும்போது தொள்ளாயிரம் என்று வரும்.

பயிற்சி

(1) கீழ்க்காணும் புணர்ச்சிகளுக்கு விதி கூறிச் சேர்த்து எழுதுக.

| | |
|---|---|
| மலை + அடி | மரம் + அழகு |
| பலா + அழகு | பூ + கா |

மரம்+வேலை　　　　பல்+உயிர்
புளி+காய்　　　　பனி+கட்டி

(2) கீழ்க் காண்பவற்றைப் பிரிக்க.

பொற்பணி　　　　தொண்ணூறு
கட்குடம்　　　　மரவடி
நெற்பயிற்　　　　மாம்பூ
முண்மரம்　　　　சேவடி

## வினாக்கள்

(1) உடம்படு மெய் என்பது என்ன? விளக்குக.

(2) பூ என்னும் சொல்முன் வல்லினம் எவ்வெவ்வாறுபுணறும்?

(3) ணகர, னகர மெய்களுக்கு முன் வல்லினம் வந்தால் எவ்வாறு புணரும்?

(4) கட்குடம், முண்மரம்—பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.

(5) மகர ஈறு முன் மூவினமும் (வல்லினம், மெல்லினம், இடையினம்) வந்தால் எவ்வாறு புணரும்?

(6) ஒன்று முதல் எட்டு எண்களோடு வருமொழிகள் வந்தால் எவ்வாறு புண்ரும்?

# V. அணிகள்

மக்கள் தம்மை அழகு படுத்திக்கொள்ள அணிகளை அணிகின்றனர். அவ்வாறே புலவர்கள் தாம் இயற்றும் நூலின் கருத்துக்கள் அழகாக இருக்க அவற்றை நயமாக நூல்களில் அமைக்கிறார்கள். இவ்வாறு அழகாக அமைப்பதை அணியென்பர். உவமை அணியைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். இங்குச் சில அணிகளை அறிந்து கொள்ளுங்கள்.

## (1) தற்குறிப் பேற்றவணி

இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின்மேல் புலவன் தன்னுடைய கருத்தை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்றவணி யாகும்.

உ - ம்:

காதலியைக் கானகத்துக் காரிருளில் கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றோ—நாதம்
அளிக்கின்ற வாழிவா யாங்கலவ ஓடி
ஒளிக்கின்ற தென்னோ வுரை.

நளன் தன் மனைவியைக் காட்டில் விட்ட பின்பு கடற்கரைக்கு வந்தான். ஆங்கு ஒரு நண்டு அவனைக் கண்டு, பயந்து தன் வளைக்குள் புகுந்துகொண்டது. அதைக்கண்ட நளன், "மனைவியைக் காட்டில் விட்டு வந்தவனுடைய முகத்தில் விழிக்கக் கூடாது என்றோ நண்டே! ஓடி ஒளிந்து கொள்கின்றாய்," என்று கூறுகின்றான்.

நண்டு மனிதரைக் காணும்போது ஓடி மறைதல் இயல்பு. ஆனால், நளவெண்பா பாடிய புலவர், மனைவியை விட்டு வந்தவனுடைய முகத்தைப் பார்க்கக் கூடா-தென்று நண்டு ஓடியதாகத் தன் கருத்தை அவ்வியல்பான நிகழ்ச்சியின் மீது ஏற்றிக் கூறியிருப்பதை அறிக.

காந்தி இறந்ததைக் காணச் சகியாமல் கதிரவன் கடலுள் மூழ்கி மறைந்தான்.

இதிலும் தற்குறிப்பேற்ற வணி அமைந்துள்ளதை அறிக.

## (2) உயர்வு நவிற்சி யணி

ஒரு பொருளின் இயல்பான தன்மையைக் கூறாமல், கேட்போர் வியக்குமாறு அதனை உயர்த்திக் கூறுவது உயர்வு நவிற்சி யணியாகும்.

உ-ம்:

முறை வகுத்த பொற்பொருப்போ! பதுமரா
கக்கிரியோ! முத்தார் வெற்போ!
துறை கொழித்த செழும்பவளக் குன்றோ!
நீல வரைத் தொகையோ! என்ன
நிறை கழுத்து நெற்பொலிகள் வகையுரைத்தல்
அரிது; தொகை நிகழ்த்துங் காலை
உரையிடற்கும் ஆற்றுவாம் திகிரிவரை
முதலாய ஓங்கல் யாவும்.

இதில் நெல் அம்பாரங்களை மேரு மலையோ, பதும-ராக மலையோ, முத்துமலையோ, பவளமலையோ, நீலகிரியோ என உயர்த்திக் கூறியுள்ளதை அறிக.

136341
சென்னை 600 008.

## (3) முரண் அணி

சொல்லாலும், பொருளாலும் மாறுபாடு உண்டாகும்படியாகக் கூறுவது முரண் அணி எனப்படும். (முரண் = மாறுபாடு.)

உ-ம் : கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளுங் களிப்பே.

இதில் 'கல்லார்', 'கற்றவர்' என்பவை மாறுபட்டு இருப்பதை நோக்குக.

காலையும் மாலையும் கைகூப்பிக் கால்தொழுதால்
வேலை வினையெல்லாம் கீழவாம்—கோலக்
கருமான்தோல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்தார்
பெருமானைச் சிற்றம் பலத்து.

இதில் காலை மாலை, கை கூப்புதல் கால்தொழுதல், கருமை வெண்மை, செம்மை பசுமை என்பன மாறுபாடாக உள்ளமையை யறிக.

### வினாக்கள்

(1) தற்குறிப்பேற்ற வணி எவ்வாறு வரும் ?
(2) உயர்வு நவிற்சி யணியின் இலக்கணம் யாது ?
(3) இரவு பகல்—இஃது என்ன அணி ?
(4) நூலில் ஏன் அணிகள் அமைக்கப்படுகின்றன ?

# VI நிறுத்தற் குறிகள்

## (1) ஒற்றை மேற்கோள் குறி ‘ ’

(அ) பழமொழியை ஒற்றை மேற்கோள் குறிக்குள் அமைக்கவேண்டும்.

உ-ம்: ‘தன்கையே தனக்கு உதவி,’ என்பது பெரியோர் மொழி.

(ஆ) ஓர் எழுத்தையோ, சொல்லையோ குறித்து எழுதும்போது, அவற்றை ஒற்றை மேற்கோள் குறிகளுக்குள் அமைக்கவேண்டும்.

உ-ம்: ‘ணை’ இவ்வெழுத்து சரியாக எழுதப்படவில்லை.

‘கரணை’ என்று எழுதியிருப்பது தவறு.

(இ) ஒன்றின் தலைப்பையும் ஒற்றை மேற்கோள் குறிகளுக்குள் அடக்கவேண்டும்.

உ-ம்: இன்று திரு. நாமக்கல் கவிஞர் அவர்கள், ‘நாமும் நமது நாடும்’ என்பதைப் பற்றிப் பேசுவார்.

## (2) இரட்டை மேற்கோள் குறி “ ”

(அ) ஒருவர் கூறியதை அவர் கூறியபடியே கூறும்பொழுது இக்குறி இடவேண்டும்.

உ-ம்: இராமன், “இப்பொழுது நான் சாப்பிட வரமாட்டேன்,” என்று சொல்லிவிட்டான்.

இதில் இராமன் சொல்லியதை இரட்டை மேற்கோள் குறிகளுக்குள் அமைத்திருப்பதைக் காண்க.

(ஆ) மேற்கோளாகக் காட்டும் செய்யுளையும், இரட்டை மேற்கோள் குறிகளுக்குள் அமைக்க வேண்டும்.

உ-ம்: "எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை மேல் வருக வென்பர்"

என்னும் நறுந்தொகைச் செய்யுள் கல்வியின் மேன்மையை விளக்குகின்றதல்லவா?

## (3) சிறுகோடு இடல் —

(அ) ஒருவனுக்குப் பல பெயர்கள் இருந்தால், அவற்றை எழுதுமிடத்து இக்குறி யிடல் வேண்டும்.

உ-ம்: கண்ணன்—செங்கண்ணன்—கமலக்கண்ணன் வந்தான்.

(ஆ) ஒன்றையே பலமுறை சிறப்பித்துச் சொல்லும் போதும் இக்குறியை இடல்வேண்டும்.

உ-ம்: நம் தாய்நாடு—நம் பாரதபூமி—நம் இணையற்ற நாடு முற்காலத்தில் பெருமையில் சிறந்திருந்தது.

## (4) அடைப்புக் குறி ( )

ஒரு முற்றுத்தொடரில் அமைந்திருக்கும் பொருள் விளங்காச் சொல்லையோ, தொகைச் சொல்லையோ விளக்க விரும்பினால், அவற்றை அடைப்புக் குறிகளுக்குள் அமைக்கவேண்டும்.

உ-ம்: (i) மாந்தர்கள் (மனிதர்கள்) யாவரும் இதை நன்கு உணரவேண்டும்.

இதில் அருஞ்சொற்குப் பொருள் விளக்கப்பட்டது.

(ii) பாண்டவர் ஐவரும் (தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன்) வந்தனர்.

இதில் தொகைச்சொல் விளக்கப்பட்டது.

## பயிற்சிகள்

கீழே காண்பவற்றில் காற்புள்ளி முதலிய குறிகளையும், இதில் கற்றுக்கொண்ட குறிகளையும் வேண்டுமிடங்களில் அமையுங்கள்.

(1) சீனன் ஆடி பாடி ஓடி ஓய்ந்தான்.

(2) அவன் எனக்கு மிட்டாய் கொடுத்தாயா என்று கேட்டான்.

(3) நிலம் நீர் தீ வளி வான் இவை ஐம்பெரும் பூதங்கள்.

(4) இன்று மாணவர்கள் நம் நாட்டின் பெருமை என்பதைப் பற்றிப் பேசுவார்கள்.

(5) நான் பெங்களூரில் உள்ள பொருட்காட்சிச் சாலைக்குச் சென்று பார்த்தேன் பின்பு விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைக்குச் சென்றேன் அங்கே பலரை அறிமுகப் படுத்திக் கொண்டேன்.

(6) திரிகடுகு என்பது மூன்று பொருள்களைக் குறிக்கும் அவை சுக்கு மிளகு திப்பிலி முதலியன.

(7) நேற்று நீ இவண் இங்கே இருந்தாயோ.

(8) அருள்மணி ஏழை பங்காளன் உலகபெருமான் காந்தி நம்மை விட்டுப் பிரிந்தார்.

# VII கட்டுரை எழுதுதல்

ஒரு மாணவனுடைய கல்வித் திறமையைக் காட்டுவது கட்டுரையாகும். ஆதலால், கட்டுரையை நன்றாக எழுதக் கற்றுக் கொள்ளவேண்டும். பல மாணவர்கள், கட்டுரையை நன்றாக எழுதாததின் காரணமாகப் போதுமான மதிப்பெண் பெறுவதில்லை. கட்டுரையை நன்றாக எழுதுவதற்கு அதன் விதிகளை நன்கு அறியவேண்டும். அவ்விதிகளுள் சில கீழே தரப்பட்டிருக்கின்றன. அவைகளைப் படித்து மனதில் பதிய வைத்துக் கொள்ளுங்கள்.

## கட்டுரை விதிகள்

(1) எழுத்து ஒழுங்காக இருக்கவேண்டும்.

(2) பெரிய பெரிய தொடர்களை எழுதி இடர்படக்கூடாது. சிறிய சிறிய தொடர்களால் எழுதலாம்.

(3) வேண்டு மிடங்களில் குறியீடுகள் அமைக்க வேண்டும்.

(4) வேண்டு மிடங்களில் பழமொழிகளும், மேற்கோள்களும் கையாளப்படவேண்டும்.

(5) பொருள்கள் பொருத்தமுறத் தொடர்ந்து இருக்கவேண்டும்.

(6) பத்திகள் பிரித்து எழுதப்படவேண்டும். ஒவ்வொரு பத்தியும் குறிப்பிட்ட பொருளைப் பற்றியே எழுதப்படவேண்டும். திடீரென்று வேறு பொருள் அதில் கலத்தல் கூடாது.

(7) ஆரம்பம், முடிவு இவைகள் பொருத்தமுற அமைந்திருக்கவேண்டும்.

(8) சொந்த நடையால் எழுதப்படவேண்டும்.

(9) கருத்துக்கள் சிக்கலாக இல்லாமல் தெளிவாக இருக்கவேண்டும்.

(10) எழுத வேண்டுபவைகளை நன்கு மனதில் பதிய வைத்துக் கொண்ட பிறகு எழுதத் தொடங்க வேண்டும். இல்லாவிட்டால், தொடர்கள் பொருத்த மில்லாமல் அமைந்து விடும்.

கட்டுரை பலவகைப்படும். அவற்றுள் சிலவற்றிற்கு மாதிரிக் கட்டுரைகள் கீழே தரப்பட்டிருக்கின்றன. அவற்றை நன்கு படித்தறிந்து, அம்மாதிரியாக எழுதப் பழகிக் கொள்ளுங்கள்.

## (1) வருணனைக் கட்டுரை

ஒன்றை நேரில் பார்த்தோ, அதைப் பற்றிக் கேட்டோ வருணித்து எழுதும் கட்டுரை வருணனைக் கட்டுரை எனப்படும்.

மாதிரி

### மலை

நிலத்தின் அமைப்புக்கள் பலவகைப்படும். அவற்றுள் கற்களோடும், பெரும் பாறைகளோடும், தாவரங்களோடும் மிகவும் உயரமாகவுள்ள அமைப்புக்கு மலை என்று பெயர். சிலவிடங்களில் மலைகள் தொடர்ந்து இருத்தலுண்டு. இமயமலைத் தொடரை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். மலையைப் பற்றிய விவரங்களைச் சிறிது கவனிப்போம்.

மலைமீதில் பெரிய பெரிய மரங்களும், புதர்களும், செடிகளும், கொடிகளும் காணப்படும். சிலவிடங்களில்

புதர்கள் நாம் உட்புக முடியாதபடி படர்ந்திருக்கும். சில விடங்களில் கொடிகள் பின்னிக்கொண்டிருக்கும். சில மரங்களிலும், புதர்களிலும், செடிகளிலும், கொடிகளிலும் மலர்கள் மிக அழகுடன் தோன்றும். பல உருவமுள்ள இலைகள் பல நிற மலர்களோடு தோன்றுவது அரிய காட்சியாக இருக்கும். சில விடங்களில் மரங்கள் அடர்ந்து தோப்பாகக் காணப்படும். சில மரங்கள் இலைகளை யுதிர்த்து, காய்ந்துபோன மரங்களைப்போன்று காணப்படும். காய்கனிகளையுடைய மரங்களின் கிளைகள் அசைவது, காய்கனிகளை விருந்திட நம்மை அழைப்பது போன்று தோன்றும்.

சில மலைகளில் தாவரங்கள் அடர்ந்து இருப்பதால், அவ்விடங்களில் பலவிதமான பறவைகள் தங்கியிருக்கும். மலைகளில் பெரும்பாலும் மக்கள் நடமாட்டம் இராதாகையால் பறவைகள் அங்குத் தம் கூடுகளை அமைத்துக் கொண்டிருக்கும். காட்டுப்புறா, கானங்கோழி, கௌதாரி, தேன்சிட்டு, மயில் இவைகளை நம்மூர்ப்புறங்களில் நாம் காண்பது அரிது. மலையிடத்து நாம் இவற்றைக் கண்டால், நம்மனம் அக்காட்சியிலேயே ஈடுபட்டு, அவற்றைப் பற்றி ஆராய்வதில் இறங்கிவிடும். தன்னிறத்தோடு மாறுபாடிலாத தரையில் பதுங்கியிருந்து, திடீரென்று கௌதாரி பறந்து செல்வதைக் கண்டால், எவர் மனந்தான் வியப்புறாது? மாலை வேளையில் மலையினிடத்து ஒருவித பறவை ஒலித்தலுண்டு. மலையினிடத்து அவ்வொலியைக் கேட்டால்தான், அவ்வொலியின் இனிமையை நுகர்ந்து நாம் மகிழ முடியும். பிறர் தம் திறமையால் எவ்விதத்தில் எடுத்துரைத்தாலும், அவ்வொலியின் இனிமையை நாம் நுகர முடியாது. சுருங்-

கச் சொல்லுமிடத்து, மலையைப் பறவைகளின் நகரம் என்றே கூறலாம்.

மலையினிடத்துப் பறவைகளே யன்றி ஏனைய உயிர்களும் வாழ்கின்றன. தாவரங்கள் அடர்ந்துள்ள சில மலைகளில் புலி, சிங்கம், கரடி முதலிய கொடிய விலங்குகளும் இருப்பதுண்டு. அதனால், மலையினிடத்து வாழ்வோர்கூட அங்கு அச்சமின்றிச் செல்லமாட்டார்கள். மலைப்பாம்புகள் புதர்களிடத்துத் தங்கியிருந்து சிறு உயிர்களைப் பிடித்து, விழுங்கித் தமக்கு ஆகாரமாகக் கொள்ளும். மான் பயந்த நோக்குடையது. அதன் பார்வை மிக அழகாக இருக்கும். இத்தகைய இயல்பி-னைக்கொண்ட மான்கள், அங்குக் கொடிய விலங்குகளுக்-குப் பயந்துகொண்டு இரையைத் தேடிக்கொண்டிருக்-கும். அந்நியராக இருக்கும் நம்மை அது கண்டு, காற்றைப் போன்று கடுகி, ஓடும் காட்சி, கண்டு இன்புறத்தக்கது. இதைக்காட்டிலும், அது ஓடி நின்று, தன் தலையைச் சாய்த்து, நம்மைப் பார்க்கும் காட்சிதான், மிக்க இன்பத்-தைத் தரவல்லது.

செயற்கை யழகு மிகுந்த காட்சிகள் எத்தனையோ இருக்கின்றன. அவையாவும் இயற்கைக் காட்சிக்கு இணையாகமாட்டா. இதனால்தான், "இயற்கைக் காட்சியே இன்புறுங் காட்சி, செயற்கைக் காட்சியால் சிறப்பும் உண்டோ", என்று ஒரு புலவர் பாடியுள்ளார். இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிப்பது மிகவும் நல்லது. அக்காட்சியால் நாம் மகிழ்ச்சி மட்டும் அடை-கிறோமென்பதில்லை. அதனால் அரிய விஷயங்களையும் அறிந்துகொள்ளுகிறோம். அதனால் நம் அறிவு பெருகும். ஆதலால், நாம் மலையினிடத்துச் சென்று இயற்கைக் காட்சிகளைக் காண்பது மிக்க பயனுடையதாகும்.

பயிற்சி

(1) நீ கண்ட ஒரு மலையை வருணித்து ஒரு கட்டுரை எழுதுக.

(2) இரவில் நாம் வானத்தில் காண்பவைகளை வருணித்து ஒரு கட்டுரை வரைக.

(3) நீ பார்த்த ஒரு சோலையை வருணித்து ஒரு கட்டுரை வரைக.

## (2) விளக்கக் கட்டுரை

அன்பு, அருள், நட்பு, பெருந்தன்மை, ஈகை முதலியவைகளைப் பற்றி விளக்கி எழுதும் கட்டுரைக்கு விளக்கக் கட்டுரை என்பது பெயர்.

மாதிரி

### அருள்

அருள் என்பதை இரக்கம், தயை, கண்ணோட்டம் என்ற சொற்களாலும் வழங்குவர். ஒருவனுடைய துன்பத்தைக் காணும்போது, கண்டவனும் வருந்தும் தன்மை அருள் எனப்படும். இவ்வருளை மக்கள் யாவரும் கொண்டிருக்க வேண்டுமென்று அறிஞர் கூறுவர். அருளின் தன்மைகளையும் பயன்களையும் அறிந்து, அதன்போக்கில் செல்லுதல் அறிவுடைமைக்கு அழகாகும். ஆதலால், அருளைப்பற்றியவைகளைச் சற்று ஆராய்வோம்.

ஒருவனுக்குப் பிச்சையிட வேண்டுமானால், அதற்கு அருள்குணம் வேண்டியதா யிருக்கிறது. பிச்சைக்காரனின் இழிந்த நிலையைக் கண்டு, சிந்தித்து இரக்கமடையாவிட்டால், தருமம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் தோன்றாது. பிச்சைக்காரன் நிலைக்காக வருந்துபவன்,

அவனுக்கு ஏதாவது ஒரு பொருளைக் கொடுத்தே தீர்வான். ஆகவே, தருமத்திற்கு அருள் அடிப்படையானது என்பது புலனாகின்றது.

அருள், பாவத்தினின்று தான் நீங்கவும், மற்றவர்களைப் பாவத்தினின்று நீக்கவும் ஒருவனுக்கு உதவுகிறது. ஒரு வண்டி உளையில் அகப்பட்டுக் கொண்டதாக வைத்துக்கொள்ளுவோம். வண்டிக்காரன் என்ன செய்வான்? மாடுகளை அதட்டி ஓட்டுவான். மாடுகள் தம்மாலான வரையில் இழுக்கும்; முடியாவிடின் தவிக்கும். அப்போது வண்டிக்காரன் மாட்டைத் தன் பலங்கொண்ட மட்டும் அடிப்பான். எவ்வளவு அடித்தாலும் மாடுகள் என்ன செய்யும்? தம்மால் முடிந்தால்தானே இழுக்கும்? இதனை ஒருவன் காண்கின்றான். மாடுகள் அடிபடுவதைப் பார்த்து அவன் வருந்துகின்றான். ஏன் ? அவன் உள்ளத்தில் இரக்க முண்டாகிவிட்டது. மாடுகள் அடிதாளாமல் தவிப்பதைப் பார்த்து அவன், வண்டிக்காரனை அணுகி, “ உன்னால் தூக்கமுடியாத ஒரு மூட்டையைத் தூக்கு என்று அடித்தால் நீ தூக்குவாயா ? உன்னை அடிப்பவரை நல்லவர் என்பாயா ?” என்று கேட்டதாக வைத்துக்கொள்ளுவோம். வண்டிக்காரன் என்ன செய்வான் ? அவன் இரக்கமடைந்து, மாட்டை அவிழ்த்து விட்டு, வண்டியை மேலேற்றி, பின்பு வண்டியை ஓட்டிக்கொண்டு போவான்.

இச்செயலால் அவ்வண்டிக்காரன் நற்புத்தி அடைந்தானதலால், இனி அவ்விதமான பாவச் செயலைச் செய்ய மாட்டான். அவனுக்குப் புத்தி சொல்லியவன் இரக்க மடைந்ததால் அவனும் அவ்விதமான பாவச் செயலைச்

செய்யமாட்டான். இவ்விதத்தில் அருள், பாவச் செயலை நீக்குகிறது.

சில வண்டிக்காரர்கள், மாட்டின் கழுத்தில் புண் இருந்தாலும், கால் ஊனமடைந்திருந்தாலும் அதை வண்டியில் பூட்டி ஓட்டுகின்றனர். வண்ணான் கழுதையின் கால்களைக் கட்டி அதை மேயவிடுகிறான். அதனால் அது மிக்க துன்பமடைகின்றது. பால்காரர்கள் கன்றுக்-குட்டியைத் தவிக்கவிட்டுப் பாலைக் கறக்கின்றனர். சில நாட்களில் கன்று இறந்துபோகிறது. பணப் பேராசை-யால் பணக்காரன் ஏழைகளை வருத்துகின்றான். இவைகள் யாவும் இரக்கமற்ற செயல்களாகும்.

“அருளிலார்க்கு அவ்வுலக மில்லை” என்று ஆன்-றோர் கூறியிருக்கின்றனர். உயிர்கள்மீது இரக்க மில்லாத-வர்களுக்கு நற்கதியில்லை யென்பது இதன் பொருளாகும். ஆதலால், மோட்சமடைய வேண்டுமென்று எண்ணிக் கொண்டு, இரக்கமற்ற செயல்களைச் செய்வதால் பலனில்லை. இராமலிங்க சுவாமிகள் ‘அருட்பெருஞ்சோதி’ என்று கடவுளைக் குறித்திருப்பது கவனிக்கத்தக்கது. கடவுள் அருள் வடிவானவர் என்பது அதன் பொருள். கடவுள் அருள் வடிவாக இருப்பதால், நாமும் அருள் கொண்டு இருக்கவேண்டுமென்பது இதனால் தெரிகின்றதல்லவா?

பயிற்சி

கீழ்க்காணும் தலைப்புக்களைப் பற்றி விளக்கக் கட்-டுரைகள் எழுதுக.

(1) அன்பு.
(2) நல்லார் இணக்கம்.
(3) மாணவரும் பொதுநலத் தொண்டும்.

## (3) வரலாற்றுக் கட்டுரை

பொதுநலம் புரிந்தவர், புலவர், சமயப் பெரியார், அரசியல் தலைவர் போன்றவர்களின் வரலாறுகளை எழுதுதலும், ஒரு நிகழ்ச்சியை நிகழ்ந்தவாறே எழுதுதலும், செய்த பிரயாணங்களைப் பற்றி எழுதுதலும், கதைகளை எழுதுதலும் வரலாற்றுக் கட்டுரை எனப்படும்.

மாதிரி

### நான் செய்த புகைவண்டிப் பிரயாணம்

நான், சென்ற ஆண்டில் செங்கற்பட்டிலிருந்து சிதம்பரத்திற்குப் புகைவண்டி யேறிச் சென்றேன். இப்பிரயாணத்தைப்பற்றிச் சிறிது சொல்ல விரும்புகின்றேன்.

சிதம்பரத்திற்குச் செல்லும் புகைவண்டி, செங்கற்பட்டு புகைவண்டி நிலையத்திற்கு வந்ததும், நான் வண்டியில் ஏறிக்கொண்டேன். பெட்டிக்குள் மக்கள் நிறைந்திருந்தனர். பலருக்கு அங்கு உட்கார இடம் கிடைக்கவில்லை. எங்கேயாவது நெருக்கிக்கொண்டு உட்காரலாமென்று சுற்றுமுற்றும் பார்த்தேன். ஓரிடத்தில் ஒரு மனிதர் படுத்துக்கொண்டிருந்தார். அவரை எழுப்பிவிட்டு அங்கு உட்காரலாமென்று, நெருக்கமாகவுள்ள மக்களை விலக்கிக் கொண்டு அங்குப் போனேன்.

படுத்திருந்தவர் எழுந்து உட்கார்ந்தால், நான்கு பேர்கள் அவ்விடத்தில் உட்காரலாம். ஆதலால், நான் படுத்திருந்தவரை எழுப்பினேன். அவர் பலம் வாய்ந்த மனிதர். அவர் முரட்டுக் குணம் உள்ளவர் என்பதை அவருடைய முகமே அறிவித்தது. அதனால்தான் இது-

வரை யாரும் அவரை எழுப்பாமல் இருந்தார்களோ என்னவோ தெரியவில்லை. நான் அவரை எழுப்பியது தான் தாமதம். உடனே அவர், "என்னையா? உனக்குப் புத்தியில்லையா ?", என்று கேட்டார். எனக்கு ஆத்திரம் வந்துவிட்டது. "உட்கார இடமில்லாமல் பத்துப் பதினைந்து பேர் நின்று கொண்டிருக்கும்போது, நீர் மட்டும் படுத்துக் கொண்டிருப்பது நீதியா," என்று கேட்டேன். உடனே அவர், "நல்ல நீதியைக் கண்டு-விட்டாய். பேசாமல் இரு. அப்புறம்......" என்று சொல்லிப் படுத்துக்கொண்டேதான் இருந்தார். அப்-பெட்டியில் இருந்தவர்கள் சிரித்துக்கொண்டிருந்தார்-களேஒழிய, இதைப்பற்றிக் கவனிக்கவே இல்லை.

வண்டி அடுத்த நிலையத்திற்கு வந்தது. அங்கு, நான் இருந்த பெட்டியில் நான்கு ஆண்கள் ஏறினர். அவர்களுள் ஒருவர் படுத்திருந்தவரை எழுப்பினர். படுத்திருந்தவர் தலையைத் தூக்கி முறைத்துப்பார்த்து, "புத்தியிருக்கிறதா இல்லையா," என்று கேட்டார். அவ்-வளவுதான் தாமதம். உடனே அங்கு ஏறிய நால்வரும் அவரிடம் வந்து, நியாயமான முறையில், "நீர் படுத்துக் கொண்டு இருப்பதும், கடிந்து பேசுவதும் நியாயந்தானா," என்று கேட்டு வாதாடினார்கள். அப்போது அப்பெட்டி-யில் இருந்த சிலர் அந்நால்வருடன் கலந்து கொண்டார்-கள். பலபேர்கள் ஒன்று சேர்ந்து கொள்ளவே படுத்-திருந்தவர் திக்கு முக்காடினார். வேறு வழியில்லை என்று எழுந்து உட்கார்ந்து கொண்டார். நானும் சிலரும் அவ்விடத்தில் உட்கார்ந்து கொண்டோம்.

இந்த நிகழ்ச்சியால், நேர்மையோடு கூடிய ஒற்றுமை-யால் காரியத்தில் வெற்றி கொள்வது மனிதத் தன்மை

யாகும் என்பதை அறிந்து கொண்டேன். பின்பு சிதம்பரத்திற்கு வண்டி வந்ததும் இறங்கி என்னிருப்பிடம் சென்றேன்.

பயிற்சி

கீழ்க்காணும் தலைப்புக்களைப் பற்றி வரலாற்றுக் கட்டுரைகள் எழுதுக.

(1) ஒரு நல்லரசர் வரலாறு.
(2) நீ செய்த ஒரு நற்செய்கை.
(3) நீ செய்த மோட்டார் பிரயாணம்.

# VIII. கடிதம் எழுதுதல்

பலவிதமான கடிதங்கள் இருக்கின்றன. அவற்றுள் சிலவற்றை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். கீழே காட்டப்பட்டிருக்கும் கடிதங்களையும் எழுதக் கற்றுக்கொள்ளுங்கள்.

மாதிரி

## (1) விண்ணப்பம்

வந்தவாசி, யூனியன் பஞ்சாயத்துத் தலைவர் அவர்களுக்கு.

வந்தவாசி, பெரியதெரு, 18 - எண் இல்லம், ப. மருதப்ப முதலியார் வணக்கமாய் எழுதிக்கொண்ட விண்ணப்பம்.

ஐயா !

தங்கள் அலுவலகத்தில் கணக்கர் வேலைக்கு ஒரு ஆள் தேவை என்று செய்தித்தாள் மூலம் நான் நேற்று அறிந்தேன்.

நான் பள்ளியிறுதி வகுப்புத் தேர்வில் (S. S. L. C. Public Examination) தேர்ந்து இருக்கின்றேன். நான் மேற்கண்ட படிப்பை முடித்து ஐந்தாண்டுகளாகியும், இன்னும் எனக்கு எந்த வேலையும் கிடைக்கவில்லை.

ஆதலால், என்னைத் தங்கள் அலுவலகத்தில் கணக்கராக அமர்த்திக்கொள்ளுமாறு தங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

நாள் : 15-8-'54
இடம் : வந்தவாசி

இப்படிக்கு,
உண்மையுள்ள,
மருதப்ப முதலியார்.

முகவரி :
பஞ்சாயத்துத் தலைவர்,
வந்தவாசி.

## (2) வாணிகக் கடிதம்

திருச்சி,
30—8—'54.

சென்னை, திருவல்லிக்கேணி, ராஜா ராம்சந்தர் கம்பெனி முதல்வருக்கு,

ஐயா !

கீழ்க்காணும் புத்தகங்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு V. P. P. மூலம் அனுப்பக் கோருகிறேன். வாணிகத்திற்காகப் புத்தகங்கள் வாங்குவதால், வாணிகக் கழிவு (Discount) கொடுக்குமாறும், விரைவில் அனுப்புமாறும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

### புத்தக விவரம்

| | | |
|---|---|---|
| (1) | வீர சித்திரங்கள் | 12 |
| (2) | செங்குட்டுவன் | 20 |
| (3) | அநுபவமுறை இலக்கணம் 5 ஆம் படிவம் | 20 |
| (4) | நல்லிசைப் புலவர் | 25 |
| (5) | தமிழ்மொழிப் பயிற்சி 4-ஆம் படிவம் | 30 |
| | மொத்தம் | 107 |

புத்தகம் அனுப்ப வேண்டிய முகவரி:
அ. நடராசன்,
புத்தக வணிகர்,
18. காந்தன் கம்பெனி,
திருச்சி.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
அ. நடராசன்.

முகவரி:
ராஜா ராம்சந்தர் கம்பெனி,
520. திருவல்லிக்கேணி ஹை ரோட்,
சென்னை – 5.

## (3) அழைப்பிதழ் எழுதுதல்
### மாதிரி
### தலைமை தாங்க அழைத்தல்

மாணவர் தமிழ்க் கழகம்,
போர்டு உயர்நிலைப்பள்ளி,
செங்கம்,
5—9—'54.

போளூர், போர்டு உயர்நிலைப்பள்ளி, தலைமை யாசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

ஐய!

எங்கள் பள்ளி மாணவர் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக 15–9–'54 அன்று ஷெசங்கக் கூட்டமொன்று நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. திருவண்ணாமலை நகராண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி உதவியாசிரியர் M. நாராயணன் M.A., அவர்கள் 'நம் நாட்டின் முன்னேற்றம்' என்பதைப் பற்றிச் சொற்பொழிவாற்ற இசைந்துள்ளார். தாங்கள் அன்று அக்கூட்டத்திற்குத்

தலைமை தாங்கி நடத்தி வைககுமாறு இச்சங்கத்தின் சார்பாகவேண்டிக்கொள்ளுகிறேன். தங்கள் அன்பார்ந்த இசைவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன். தங்கள் இசைவைப் பெற்றதும் நிகழ்ச்சிநிரல் அனுப்பி, மேற்கொண்டு ஆவனவற்றைக் கவனித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
இசைச்செல்வன்,
செயலர்.

முகவரி :

திரு. வெ. சுப்பிரமணியன் அவர்கள், M.A.,B.T.
தலைமையாசிரியர்,
போர்டு உயர்நிலைப்பள்ளி,
போளூர்,
வடஆற்காடு மாவட்டம்.

## (4) பொதுக்கூட்ட அழைப்பிதழ் எழுதுதல்

### பொதுக்கூட்ட அழைப்பிதழ்

அன்புடையீர் !

20-9-'54 அன்று மாலை 6 மணிக்கு இவ்வூர் (திருச்செந்தூர்) குமரன் மைதானத்தில் இவ்வூர் தேசீய வாலிபர் சங்கத்தின் சார்பாக திரு. மதிவாணன் B.A. அவர்கள் 'கிராமத் தொண்டு' என்பதைப்பற்றிச் சொற்பொழிவாற்றுவார். அவ்வமயம் பொதுமக்கள் அனைவரும் கூட்டத்திற்கு வந்திருந்து கூட்டத்தைச்

சிறப்பித்து வைக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறார் கள். ஒலிபெருக்கியும் பெண்களுக்குத் தனியிடமும் உண்டு.

வாலிப சங்கத்தார்

பயிற்சி

கீழ்க்காணும் தலைப்புக்களைப் பற்றிக் கட்டுரைகள் வரைக.

(1) (அ) உனக்கு ஆசிரியர் வேலை தரும்படி வேண்டி, மாவட்ட கழகத் தலைவருக்கு ஒரு விண்ணப்பம் எழுதுக.

(ஆ) ஓர் அஞ்சல் அலுவலகத்தில் உனக்குக் கணக்கர் வேலை தரும்படி, அஞ்சல் அலுவலக டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்கு ஒரு விண்ணப்பம் எழுதுக.

(2) (அ) ஒரு பலகைத்தொழிற்சாலைக்கு நான்குவிதமான பலகைகள் 500 அனுப்பும்படி வேண்டி, வாணிகக் கடிதமொன்று எழுதுக.

(ஆ) ஒரு பென்சில் விற்பனை கம்பெனிக்கு அக்கம்பெனியார் அனுப்பிவைத்த பென்சிலில் 100 குறைகிறதென்று தெரிவித்து, அவற்றை அனுப்புமாறு வேண்டி, வாணிகக் கடிதமொன்று எழுதுக.

(3) (அ) ஒரு வழக்கறிஞரை சொற்பொழிவாற்ற வருமாறு வேண்டி, அழைப்பிதழ் ஒன்று எழுதுக.

(ஆ) ஒரு பொதுக்கூட்டத்திற்குச் சொற்பொழிவு கேட்க வருமாறு பொதுமக்களை வேண்டி, பொதுக்கூட்ட அழைப்பிதழ் ஒன்று எழுதுக.

230